11th February 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 18 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## இன்று இரவு முதல் ஷ:.பான் மாதம் ஆரம்பம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1445 புனித ஸஃபான் மாத பிறை நேற்று தென்படவில்லை

ஹிஜ்ரி 1445 ஸஹ்பான் மாதத்தின் தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு நேற்று 10ஆம் திகதி சனிக் கிழமை மாலை கொழும்பு

02ம் பக்கம்பார்க்க...



# சுயேட்சைகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்க இம்ரான் தீவிரம்

## கூட்டணி ஆட்சிக்கு நவாஸ் ஷெரீபும் முஸ்தீபு

## பாகிஸ்தானில் தொடரும் ஸ்திரமற்ற நிலை


**பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் வெளியிட்ட உத்தியோகபூர்வ முடிவுகள்**

பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் இன்று 2.00 மணியளவில் வெளியிட்ட

03ம் பக்கம்பார்க்க...



## பேருவளை ஜாமிஆவில் நாற்பெரும் விழாக்கள் இன்று




(பீ.எம்.முக்தார்)

பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஐம்பதாண்டு நிறைவை யொட்டிய பொன்விழா நிகழ்ச்சியின் மற்றுமொரு தொடரின் வரலாற்று நிகழ்வு. இன்று 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு ஜாமிஆ நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜாமிஆ நளீமிய்யா

02ம் பக்கம்பார்க்க...

## சஜித், ஸ்ரீதரனுக்கு இந்தியா வருமாறு மோடி அழைப்பு



இந்தியா பிரதமர் நரேந்திர மோடி, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசா மற்றும் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் ஆகியோருக்கு

02ம் பக்கம்பார்க்க...





## தென்கிழக்கு பல்கலைக்கழக 16வது பட்டமளிப்பு விழா

(நூறுள் ஹுதா உமர், பாறுக் சிஹான், எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா நேற்று (10) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் விழா

11ம் பக்கம்பார்க்க...



## ஒன்லைன் சட்டத்தில் முதல் நபர் கைது

### பாதுகாப்பு அமைச்சர் டிரான்



கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒன்லைன் சட்டத்தின் அடிப்படையில் முதன் முதலாக கொழும்பில் ஒருவர் கைது

02ம் பக்கம்பார்க்க...

## இந்த ஆண்டு ஹஜ்ஜுக்காக இம் மாதம் 29 முதல் வீசா விநியோகம்

### ஹஜ் குழு தலைவர் அன்சார்



இவ்வருடம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இதுவரை மூவாயிரத்து ஐநூறு பேர் தமது பேர்களை

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை




இந்தியாவின் தஞ்சாவூரைச் சேர்ந்த துபாயிலுள்ள உயர் ரக நிறுவன தொழிலதிபர் வெள்ளம் ஜீ டாக்டர் எம்.ஜே. இக்பாலுடன் இலங்கை வருகைதந்துள்ள வர்த்தகப் பிரமுகர்களால் "உதயம்" பத்திரிகையின் பிராதானிகள் நேற்று இரவு (10) கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(திருச்சி சாகுல் ஹமீது)

## பேருவளை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கலாபீட நிர்வாக சபையும் ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் மர்ஜான் பளீல் கலந்து சிறப்பிக்கிறார்.

விசேட அதிதியாக நளீமிய்யா பரிபாலன சபைத்தலைவர் யாகூத் நளீம் மற்றும் கௌரவ அதிதியாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர்.

இவ்விழா நிகழ்வில் நளீமிய்யா உருவாக்கத்திற்கு நளீம் ஹாஜியாருடன் இணைந்து உழைத்த ஸ்தாபகர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, நளீமிய்யாவின் ஐம்ப தாண்டு நிறைவையொட்டிய நினைவு முத்திரை வெளியீடு, "ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்: எண்ணக்கருவும் தோற்றமும்" என்ற வரலாற்று நூல் வெளியீடு மற்றும் நளீமிய்யா கலாபீடத்திற்கான 'SOLAR POWER PROJECT' சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டமும் இந்நிகழ்வின்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளமையும் விசேட அம்சமாகும்.

## ஒன்லைன்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார். சமூக ஊடகம் மூலம் தவறான கருத்துக்களை பரப்பியதாக இரகசிய போலீசார் இவரை கைது செய்ததாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிளான் அலஸ் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்படும்போது இவருடைய கையில் 4.5 லட்சம் ரூபாய் பணம் இருந்ததாகவும் டொலர்களாக மாற்றி பணத்தை பெற்றுள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்த...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்துள்ளதாக இலங்கை ஹஜ்குழுவின் தலைவர் வை.எம். அன்சார் தெரிவித்துள்ளார். மேலும் இவர்கள் 93 முகவர் நிலையங்கள் ஊடாக செல்லவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு விசா வழங்குதல் தூதுவராலயத்துக்கு செல்லாமல் ஒன்லைன் ஊடாக வழங்க சகல நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும், எதிர்வரும் 29ம் திகதி முதல் விசாக்கள் விநியோகிக்கப்படும் என ஹஜ் குழுவின் தலைவர் அன்சார் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கான முதல் ஹஜ் யாத்திரிகர்கள் குழு மே மாதம் 29ம் திகதி புறப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது நாட்டின் எப்பாகத்திலும் ஸஹ்பான் மாதத்திற்கான தலைப் பிறை தென்படாத காரணத்தினால் புனித ரஜப் மாதத்தை 30 ஆக பூர்த்தி செய்து இன்று 11ஆம் திகதி ஞாயிற்று கிழமை மாலை மஃரிபுடன் ஸஹ்பான் மாதத்தை ஆரம்பிப்பதென கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் பிறைக்குழு என்பன உத்தியோக பூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவித்தது.

ஹிஜ்ரி 1445 ஸஹ்பான் மாதத்தின் தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு

கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நிர்வாகிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிறைக் குழு மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழுவின் உப தலைவர் மௌலவி அஹமட்ஸாஹ் தலைமையில் இடம் பெற்றிருந்தது.

இதன் பிரகாரம் புனித பராஅத் இரவு (ஸஃபான் 15ஆம் இரவு) 2024.02.25ஆம் திகதி ஞாயிறு மாலை (திங்கள் இரவு) அனுஸ்டிக்கப்படும் என்றும் ஹிஜ்ரி 1445 ரமழான் மாதத்திற்கான தலைப் பிறையை தீர்மானிக்கும் மாநாடு எதிர் வரும் ஸஹ்பான் பிறை 29வது நாளாகிய 2024.03.11ஆம் திகதி திங்கள் கிழமை மாலை கூடும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சஜித்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜே.வி.பி தலைவர் அனுர குமாரா திசாநாயக்காவின் விஜயம் முடிந்ததையடுத்து இந்த இரு கட்சிகளின் தலைவர்களுடனான தூதுக்குழுவுக்கு இந்திய செல்ல அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆண்டாக இருப்பதனால் இவ்வாறான சந்திப்புக்கள் மிக முக்கியமானது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும் இவர்கள் எப்போது விஜயம் மேற்கொள்வார்கள் என்பது பற்றிய தகவல்கள் இதுவரை தெரிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.







# சவூதி தூதரகத்தின் “கேட் வாக் 2024”





சவூதி அரேபிய இராச்சியத்தின் இலங்கைக் குடியரசின் அதிமேதகு தூதுவர் திரு காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி “கேட் வாக் 2024” நிகழ்வை 10 பெப்ரவரி 2024 சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள Galle Face Hotel இல் நடத்தினார்.

2023 ஜூன் 12 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச அரேபிய சிறுத்தை நாள், சவூதி அரேபிய இராச்சியம் சமர்ப்பித்த “சர்வதேச அரேபிய சிறுத்தை நாள்” என்ற தீர்மானத்தை 30 க்கும் மேற்பட்ட நாடுகளின் இணை அனுசரணையுடன் ஒருமனதாக நிறைவேற்றியது.

அரேபிய சிறுத்தை பெரிய பூனைகளின் (சிங்கம், பாந்தெரா டைகிரிஸ், மலை சிங்கம், ஜாகுவார், சிறுத்தை, புலி, பனிச்சிறுத்தை) மிகவும் அழிந்து வரும் இனங்களில் ஒன்றாகவும், வனவிலங்குகள் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும் சவுதி அரேபியா உட்பட அரேபிய சிறுத்தையின் தாயகமாக கருதப்படும் நாடுகளில், அதன் உயிர்வாழ்வதற்கு பங்களிக்கும் பல்வேறு முயற்சிகள் மூலம் அதைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

இந்த நிகழ்வில் காலி முகத்திடல் கடற்கரையில் நடைபயணம் இடம்பெற்றதுடன் கொழும்பின் சுற்றுலாத்தலங்களை முன்னிலைப்படுத்தியது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கைக் குடியரசின் அங்கீகாரம் பெற்ற அரபு நாடுகளின் தூதரகத் தலைவர்கள் மற்றும் பல முக்கிய ஊடகவியலாளர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

## சுயேட்சைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ முடிவுகளின் பிரகாரம் இம்ரான் கான் ஆதரவு சுயேட்சை குழுவினர் 102 ஆசனங்களை வென்றுள்ளனர்.

நவாஸ் ஷெரீபின் முஸ்லிம் லீக் 73 ஆசனங்களையும், பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 ஆசனங்களையும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. எஞ்சிய ஆசனங்களை சிறு கட்சிகளும் சுயேட்சை அணியினரும் வென்றுள்ளனர்.

பாகிஸ்தான் தேர்தலில் எந்த கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

இதே வேளை, நடந்து முடிந்த பாகிஸ்தான் பொது தேர்தலில் சிறையில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு சுயேட்சை அபேட்சகர்கள் 99 பேர் வெற்றி பெற்று முதன்மையிடத்தை வகிக்கின்றனர்.

15 தேர்தல் தொகுதிகளில் முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்ற நிலையில் இம்ரான் கானின் சுயேச்சை அணியே முதன்மை வகிக்கின்றது. 169 ஆசனங்கள் தேவைப்படுகின்ற நிலையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிமையாக ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்தேர்தலில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் முஸ்லிம் லீக் 71 ஆசனங்களை பெற்றுள்ளது. வில்வால் பூடோ சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 ஆசனங்களை பெற்றுள்ளது. சில மாவட்டங்களில் தேர்தல் வன்முறைகள் இடம் பெற்று இருவர் கொல்லப்பட்டும், 24 பேர் காயத்துக்கு உள்ளாகி இருப்பதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 FEBRUARY 11 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஸ்திரமான ஆட்சியே பாகிஸ்தானுக்கு தேவை

பாகிஸ்தானின் பொதுத் தேர்தல் கடந்த வியாழக்கிழமையன்று நடந்து முடிந்தது. எனினும் இரண்டு நாட்களுக்குப் பின்பே தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதனை எழுதும் போது எந்த ஒரு கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கு அறுதி பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த நிலையில் கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது தவிர்க்க முடியாதது.

நான்கு முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்யின் கட்சியான முஸ்லிம் லீக் 71 ஆசனங்களை வென்றுள்ள அதே நேரம் முன்னாள் பிரதமரான இம்ரான் கானின் தலைமையிலான சுயேட்சை குழு 99 தொகுதிகளை வென்றெடுத்துள்ளது. மேலும் பாகிஸ்தானின் மக்கள் கட்சி 53 ஆசனங்களை வென்றெடுத்துள்ளது.

சிறைவாசம் அனுபவிக்கும் இம்ரான் கான் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் இம்ரான் கான் சுயேட்சை அபேட்சகர்களை நிறுத்தி இருந்தார்.

இக்கட்சி இம்ரான் கான் சிறையில் இருக்கும் காலப்பகுதியிலேயே 99 ஆசனங்களை வென்றெடுத்து தேர்தலில் முதல் ஸ்தானத்தை பெற்றுள்ளது. இருப்பினும் சுயேச்சை குழு கூட ஆட்சி அமைப்பதற்கு போதுமான ஆசனங்கள் கிடைக்கப்பெறவில்லை.

பொதுவாக இருக்கின்ற புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப கூட்டு அரசாங்கம் அமைப்பதில்லை என கூறிவந்த நவாஸ் ஷெரீப் இப்போது பூட்டோவின் மக்கள் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். கூட்டு அரசாங்கம் ஒன்று உருவாவதன் மூலம் பாகிஸ்தான் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையிலிருந்து ஓரளவேனும் விடுபட முடியும். இந்நிலையில் பாகிஸ்தானுக்கு ஒரு இஸ்தீரனமான நிலை தேவைப்படுகிறது.

250 மில்லியன் மக்கள் வாழும் பாகிஸ்தானில் எவரும் ஆட்சி அமைப்பதற்கு மக்கள் ஆணையைப் பெறாமையினால் கூட்டு அரசு ஒன்றை உருவாக்கி இஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்த பாகிஸ்தான் அரசியல் கட்சி தலைவர்கள் முன்வர வேண்டும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) **"உதயம்"**
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com



சுஜப் எம்.காசிம்

# விக்கெட்டுக்களை வீழ்த்த வழிவகுக்கும் அக்கிராசன உரை

தேர்தலுக்கு தயாராகும் மனநிலையில் ஜனாதிபதி உள்ளமை ஊர்ஜிதமாகியுள்ளது. அவரது உரைமட்டுமன்றி நடத்தைகளும் இதை நிரூபித்துள்ளன. கட்சிகளுக்குள் கருத்தபிப்பிராயங்களை ஏற்படுத்தும் கருத்தாளமிக்க உரையது. கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபடுமளவுக்கு ரணில் சாதித்துள்ளவை எவை?

பொருளாதார வீழ்ச்சியை கட்டியெழுப் பிய சாதனையை சந்தைப்படுத்த

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொருத்தமான தளமாக அமையுமா? இந்த எண்ணத்திலுள்ள எம்பிக்களை ஈர்த்தெடுக்கும் பாணியில்தான், ரணிலின் அக்கிராசன உரையிருந் தது. இவ்விடத்தில், ஆடும் மேடை பொருத்தமானதுதானா? என்ற சிந்த னை தடுமாற்றம் ரணிலுக்கும் இருக் கவே செய்யும். பொருளாதாரக் கொலையாளிகள் எனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளோர் ஆடும் மேடையில், தனது

பாத்திரம் பெறுமதியாகுமாவென ரணில் தடுமாறுகிறார். இதற்காகவே சகல கட்சிகளையும் அழைக்கிறார்.

ஆட்டம் நல்லதுதான், அரங்குதானே கோணலாகவுள்ளது என்ற நிலையில் எம்பிக்கள் சிலர் சிந்திக்கின்றனர். இந்நிலைமைகளால், தேசிய

இக்கட்சிகளில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைத் தவிர ஏனையவைகள் ரணிலின் திறமையை மூடி மறைக்க முயற்சிப்பது இதற்காகவே! ராஜபக்ஷ க்க்களின் மவுசை ரணில் உயர்த்தி னால், இக்கட்சிகளுக்கு எதிர்காலமு மில்லை. ரணிலைத் தம்வசம் ஈர்க்க இவர்களுக்கு தைரியமும் இல்லை.

உண்மையில், ராஜபக்க்ஷக்களின் பிடியிலிருந்து விலகும் ஒரு நிலைப் பாட்டையே ஜனாதிபதி எதிர்பார்க் கிறார். ஏனைய கட்சிகள் இதற்கு இணங்க வேண்டுமென்ற விருப்பம் அவரது அக்கிராசன உரையிலிரு ந்தது. ராஜபக்ஷக்களின் எதிரிகள் இதைப் புரிந்தால் சரிதான். இப்படியான புரிதல் ஏற்படுவதை ஸ்ரீலங்கா பொதுஜன விரும்பவில்லை. இதனால் தான், ரணிலை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு பெரமுனவின் பின்வரிசை எம்பிக்கள் விரும்பவில்லை. தாங்கள் வழங்கிய அதிகாரத்

இணக்கமா? இப்போதுள்ள பிரச்சினையே இதுதான்.

இதைப்புரிவதில் சிறுபான்மை தலைமைகள் தெளிவுபெறல் அவசியம். அடுத்த கட்டத் தீர்மானத்துக்கு இந்த தெளிவுகள் தேவை. கட்சி தாவிச் செல்லவுள்ள எம்பிக்களை வளைத்துப் பிடிக்கும் யுக்தியாக இந்தத் தெளிவுகள் துலங்கவுள்ளன. ஐக்கிய மக்கள் சக்திக்கு இன்றுள்ள பலமே இந்தச் சிறுபான்மை கட்சிகள்தான். எது நடந்தாலும் ராஜபக்ஷக்களின் அணிக்கு இத்தலைமைகள் செல்லப் போவதில்லை என்ற தைரியத்தில் சஜித் இருக்கலாம்.

ஆனாலும், பொது வேட்பாளராக ரணில்விக்ரமசிங்க வருவாரா என்ற பீதி இவருக்கு இருக்கவே செய்யும். பரந்தளவில் எம்பிக்களை உள்வாங்குவதற்கு இவ்வாறான பொதுத்தளமே ரணிலுக்கு பலமாக இருக்கும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எதிர்பார்க்கும்



அரசியலில் எதையும் எதிர்வுகூற இயலாதுள்ளது. இந்தச் சூழலில் அதிகம் தடுமாறுவது கட்சிகளின் தலைமைகளே! எந்த நேரத்தில் எந்த விக்கெட்டுக்களும் வீழ்த்தப்படலாம்.

தைக் கொண்டு, தங்களையே அழிக்கும் துரோகத்தனத்தை ரணில் கட்டவிழ்த்துள்ளார். வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைக்கு ரணில் பொருத்தமா அல்லது பெரமுன

தமிழ் தலைமைகள், வெறுமனே பொருளாதாரப் பிரச்சி னைக்கு வழிகாணும் தீர்வை மட்டும் ஏற்றுக்கொண்டு ரணிலை ஆதரிக்க முன்வருமா?

# இடாப்பில் தாமதமின்றி பெயர்களை அறிவிப்பு

(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தாமதமின்றி தமது பெயர்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சவன் சிறரத்நாயக தெரிவித்துள்ளார்.

18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட வேண்டும்.

நிதந்தர வதிப்பிடத்தை மாற்றாது திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வதிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தங்களது பெயர்களை பதிவிடுவதுடன், குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில் அவர்கள் வாக்களிக்கா முடியா விட்டாலும், அவர்களின் பெயர்களையும் வாக்காளர் இடாப்பில் பதிவ செய்து கொள்ள வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பேசப்படாத நியாயங்கள்: டியுஷனின் விலை உயிர்!?





இர்பான் இக்பால்

தமது குழந்தைகள் கல்வித் தகைமையினால் முன்னேறுவதையே பெரும்பாலான பெற்றோர் விரும்புகின்றனர். நவீன உலகில் இது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. உள்நாட்டில் மாத்திரமன்றி, வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர் மத்தியிலும் இதன் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுகிறது. உதாரணமாக, ஐக்கிய இராச்சியத்தில். இலங்கையில் உள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை போன்ற 11 பிளஸ் என அறியப்படுகின்ற பரீட்சையில் தமது குழந்தைகள் நல்ல பெறுபேற்றினைப் பெற்று, அதனூடாக புசயஅஅயச ளுஉாழழட என அறியப்படும், நல்ல பாடசாலைகள் என பெற்றோர் கருதும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு, பிள்ளைகளைப் பெற்றவர்கள், பெரும்பாடு படுகின்றனர். இன்னும் சுருக்கமாகக் கூறின், தமது உழைப்பின் பெரும் பகுதியை டியுஷன் வகுப்புகளுக்கு அனுப்புவதற்காக செலவு செய்து, கடன்பட்டுக் கஷ்டப்படுகின்றனர்.

இலங்கையிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதரண தர பரீட்சை, உயர் தர பரீட்சை என அனைத்து மட்டத்திலும் மாணவர்கள் மீதான பொறுப்பு சில வேளைகளில் பெற்றோரால் திணிக்கப்படுகிறது. இன்னொரு வகையில், பாடசாலைக் கல்வியில் கிடைக்காத விளக்கங்களையும் மேலதிக அறிவையும் பெறுவதற்காக டியூஷன் வகுப்புகள் மாணவர் வாழ்வியலில் கட்டாய இடத்தைப் பிடித்துள்ளது என்று சொன்னாலும் மிகையில்லை. ஆயினும், இதற்கொரு விலை இருக்கிறது. துரதிஷ்டவசமாக அது உயிராகவும் அமைவது மிகக் கொடுமையானது.

இவ்வாறான சம்பவங்களில் கூறப்படும் காரணங்களின் உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தக் கூடியதாயினும் கூட, மாணவர்கள் டியுஷன் செல்வது, பாடசாலைப் பருவம் முதல் பல்கலைக்கழகம் வரை இலவச கல்வி வழங்கப்படும் ஒரு நாட்டில் கட்டாயமாக இருப்பதற்கான காரணங்கள் மீளாய்வுக்குட்டுத்தப்பட்டேயாக வேண்டும். இதற்கான கேள்வி, பாடசாலைகளில் இலவச கல்வி, அதற்கான முறையில், பயனுள்ள வகையில் வழங்கப்படுகிறதா? என்பதிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். பிரத்தியேக வகுப்புகளை நடாத்தி வரும் ஆசிரியர்கள், பாடசாலை நேரத்தில் வைத்து, மேலதிக அறிவைப் பெற, இன்ன இடத்தில் இடம்பெறும் என் டியுஷன் வகுப்புக்கு வாருங்கள் என அழைப்பு விடுப்பது நானறிய 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆதலால், அவர்கள் தவறானவர்களா என்றால்? ஒருவேளை, பாடத்திட்டங்களில் தவறிருக்கிறதா என்ற மேலதிக ஆய்வு நியாயப்படுத்தலுக்காக அவசியப்படுகிறது. எவ்வாறாயினும், அண்மைக்காலங்களில், பரீட்சைகள் நெருங்கும் போது டியுஷன் வகுப்புகளுக்கு அரசாங்கமே தடை விதித்து வருவதன் பின்னணியில், இங்கு மேலதிக சுமைகளும் - குறுக்கு வழிகளும் உள்ளன என்பதையும், அது மாணவர்களின் சமநிலையைப் பாதிக்கிறது என்கிற உண்மையும் ஒளிந்திருக்கிறது என்பதையும் உணரமுடியும். வசதி படைத்தோர் தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகளை, ஆசிரியர்களை வீடுகளுக்கு அழைத்து ஏற்பாடு செய்து கொள்வதையும் தடுக்க முடியாது.

எவ்வாறாயினும், இவ்வாறான நிகழ்வுகள் சமூக மட்டத்தில் இன்னுமொரு கேள்வியை எழுப்புகின்றது. அதாவது, மாணவர்கள் மீது சுமத்தப்படும் இம்மேலதிக சுமையை சமாளிப்பதற்கும், வறுமை தடையாக இருப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையைக் கண்டறிவதிலும் செயற்படுத்துவதிலும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பென்ன? என்கிற கேள்வியே அது. முதலில், சமூகத்துக்கு கூட்டுப் பொறுப்பொன்று ஒன்றிருக்கிறதா? என்பதில் உடன்பாடு அவசியம். இலங்கையில், முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, உலகக் கல்வியென ஒரு நூற்றாண்டுக்கு முன் ஒதுக்கப்பட்டிருந்த நவீன கல்விப் பொறிமுறை, இப்போது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய உலகின் சவால்களுக்கு, குழந்தைகளைத் தயார் படுத்தவும், தொழில்வாய்ப்பு மற்றும் எதிர்காலத்துக்கு முகங்கொடுக்கவும் இதன் அவசியமிருப்பது, பெரும்பாலும், எதிர்வாதமற்ற நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், சமூகம் தனது கூட்டுப் பொறுப்பை முழுமையாக உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

100 குடும்பங்கள் வாழும் ஒரு கிராமத்தில் 2000 பேர் தொழுவதற்கு இடமுள்ள வகையில் அமைக்கப் பட்டுள்ள பள்ளிவாசல் ஒன்றை 20 வருடங்களில் ஐந்து தடவை உடைத்துக் கட்டுவதில் இருக்கும் ஆர்வமும், தமக்குத் தாமே சுமத்திக் கொள்ளும் கூட்டுப் பொறுப்பும், அதனடிப்படையில், ஐந்து வேளைத் தொழுகையின் போதும், மிக விஷேடமாக வெள்ளிக்கிழமை, மற்றும் ரமழான் நிதி சேகரிப்புகளிலும் பங்கெடுக்கும் ஆர்வம், ஊரின் மாணவமணிகளின் கல்வி மீதான கூட்டுப் பொறுப்பை இன்னும் இணைத்துக் கொள்ளவில்லை.

சாதாரண பள்ளிவாசல்களை மாடிக் கட்டிடங்களாக மாற்றினாலும், அதில் ஒரு அறையை வாசிகசாலையாகவோ, மாணவர் பயன்பெறும் கல்விக்கூடமாக மாற்றும் திட்டங்கள் பற்றி, ஆழமாக சிந்திப்பதற்கேதுவாக இன்னும் இந்தக் கூட்டுப் பொறுப்பு உணரப்படவில்லை. ஆனால், டியுஷனுக்கான பணமில்லாமல் 15 வயது மாணவி தற்கொலையென, கடந்த இரு வாரங்களாக பேசப்பட்டு வரும் சம்பவங்கள் இடம்பெற்றால், உடனடியாக, தனவந்தர்களின் சக்காத் முறைமை முதல் சமூக ஆடம்பரம் மற்றும் கோடிகளை ஏப்பமிடும் திருமணங்கள் பற்றி பாரிய அங்கலாய்ப்புகள் கொந்தளித்து அடங்குகின்றன.

ஒரு காலத்தில் ஹிப்ழ் மத்ரஸாக்களே உயர்ந்த கல்வியென இருந்த கொள்கைகள், மதரஸாக்களிலேயே கணிணி, விஞ்ஞானம் மற்றும் க.பொ.த சாதாரண தர பாடத்திட்டங்களையும் உள் வாங்கி, எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆலிம்களை உருவாக்கத் துணிந்து தற்காலத்தில் இயங்குகின்ற போதிலும், பல இடங்களில் அது வெறும் வியாபார தந்திரமாகவே பேணப்படுகின்றமையையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஆக, யார் சிந்திக்க வேண்டும்? அல்லது எங்கிருந்து சிந்திக்க வேண்டும்? என்ற கேள்விகள் தொக்கு நிற்கின்றன. எழுத்தாளர்கள் இதனை சுட்டிக்காட்டலாம், வாதப் பொருளாக்கலாம், விவாதங்களில் பங்கேற்கலாம், ஆனால், நடைமுறைச் சாத்தியம் அடி மட்டத்திலிருந்து உருவாக வேண்டும். அதற்கான வழிமுறைகள் சமூக மட்டத்தில் கண்டறியப்பட வேண்டும். வறுமை, கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருக்க முடியாத சூழல் இந்நாட்டில் நிலவுகிறது. ஆயினும், பொருளாதாரம் பல வழிகளில் மாணவர்களின் வாழ்வியலில் தாக்கம் செலுத்துகிறது.

ஒரு ஊரின் ஒட்டு மொத்த பொருளாதார மேம்பாட்டையும் ஏற்று வழி நடாத்துவதற்கான சட்டப் பொறிமுறையோ அல்லது வாய்ப்புகளோ நாட்டில் இயங்கும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட, பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கும் இல்லையாயினும் கூட, பள்ளிவாசல்களை கல்விக்கும் பயன்பெறும் தளங்களாக மாற்றிக் கொடுப்பதற்கு தடைகள் இருக்கப் போவதில்லை. வாரத்தில் ஒரு நாள், ஊரில் உள்ள படித்தவர்களைக் கொண்டே சிறந்த முறையில் மேலதிக பாட அறிவை மாணவர்க்கு வழங்கினால், அதை வழங்கும் ஆசிரியர்களை சமூகம் அதற்கான முறையில் கௌரவித்து அதற்குரிய கொடுப்பனவையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிலாவது வழங்கினால், பத்து - ஐம்பது மாணவர்கள் பயன்பெற்று, எதிர்காலத்துக்குப் பயனுள்ளவர்களாக உருவெடுப்பார்கள்.

ஈற்றில், ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருகிறது. 2018 இறுதியில், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் சமூக மட்டத்தில் ஒரு தந்தையிடம் ... இந்த ஊரில் 14 - 15 வயது சிறுவர்களே பெரும்பாலும் ஹோட்டல்களில் வேலை செய்வதைக் காண்கிறேன். அதில், உங்கள் குழந்தையும் அடங்கும். ஏன்? அவர்களை படிக்க அனுப்புதில்லையா? என வினவ, நீங்க வேற... இப்போ உழைக்கிறதுல தான் எங்களுக்கு தருவாங்க, 20 வயசுல திருமணம் முடித்ததும் உழைக்கிறதையெல்லாம் பெஞ்சாதிக்குத் தான் கொடுப்பாங்க. விடுங்க உழைக்கட்டும் என்றார்.

நியாயங்கள் பல விதம்!



# நாளை முதல் இலங்கையிலும் UPI மூலம் பணம் செலுத்த முடியும்

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



இந்தியாவின் ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் முறை அல்லது UPI செலுத்தும் முறை நாளை (12) முதல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படும் என்று வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியின் சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணையவழி முறையின் ஊடாக கொழும்பில் இது தொடர்பான முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலிசாப்ரி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

UPI எனப்படும் இந்திய ஒருங்கிணைந்த கட்டணச் செயல்முறை 2016 ஆம் ஆண்டில் இந்திய தேசிய கொடுப்பனவு கழகத்தால் உடனடி பணம் செலுத்தும் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த கட்டண முறையானது மொபைல் போன்கள் மூலம் வங்கிகளுக்கிடையேயான மற்றும் தனிப்பட்ட வர்த்தக பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது.

இதன் மூலம் இலங்கையின் சுற்றுலா வர்த்தகம் மேம்படும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மேலும் தெரிவித்தார்.




**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.


அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்

## அஸீஸ் நினைவு சொற்பொழிவு

கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸின் அஸீஸ் நினைவு சொற்பொழிவு எதிர்வரும் 17ம் திகதி சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு சாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்றும். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டப் பேராசிரியர் எம். சொர்ணராஜா இந்த உரையை நிகழ்த்தவுள்ளார்.

ஏ.ஜி.எ.ஆரி, எம். சி.ரசூல்டீன் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றவுள்ளனர். இந்நிகழ்வு காலிதீன் பாரூக் மற்றும் வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவர் இஃஸான் ஹமீட் ஆகியோரின் கூட்டு தலைமையில் இடம்பெற்றும்.



# சீனாவின் பொருளாதார வீழ்ச்சி... சர்வதேச அளவில் ஏற்படும் தாக்கம்!




எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

உலகில் மிகப்பெரிய பொருளாதார வல்லமை கொண்ட தேசமாக சீனா உருவாகி விட்டது. இந்த வல்லமையின் காரணமாக சீனா ஏனைய தேசங்களுக்கு வட்டிக்கு கடன் கொடுத்து அடிமையாக்கும் நிலையை கையாண்டு வருவதாக பரவலான குற்றச்சாட்டுகள் அதன் மேல் உண்டு என்பதை நாம் அறிவோம். இந்த நிலையில் சீனாவின் பொருளாதாரம் சரியில்லாமல் இருக்கும்போது உலக அளவில் அதன் தாக்கம் என்னவாக இருக்கும் என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

140 கோடி மக்களுக்கும் அதிகமான வாழும் மிகப்பெரிய மக்கள்தொகையை கொண்ட தேசமாகவும் , உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தி மிக்க நாடாக சீனா திகழ்கிறது. இந்த மிகப் பெரிய மக்கள் தொகை மட்டும் ஆற்றல், உழைக்கும் மிகப்பெரிய அளவிலான மக்கள் தொகை கொண்டது தான் சீனாவின் மிகப்பெரிய பலம் என்பதை யாராலும் மறுக்க இயலாது. ஆனால் தற்போது மெதுவான வளர்ச்சி, அதிகரிக்கும் இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை, ரியல் எஸ்டேட் துறையின் வீழ்ச்சி என்று பொருளாதார ரீதியாகப் பல்வேறு நெருக்கடிகளை சீனா தற்போது சந்தித்து வருகிறது. சர்வதேச அளவில் கொரானா காலத்திற்கு பிறகு ஏற்பட்டுள்ள நெருக்கடி சீனாவை பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலையில் சீனாவின் மிகப்பெரிய அளவில் கடனாளியான எவர்கிராண்டே ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் தலைவர், காவல் துறை கண்காணிப்பின் கீழ் உள்ளார். அத்துடன் பங்குச் சந்தையில் இருந்து இந்நிறுவனம் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியிலான இதுபோன்ற சிக்கல்கள் சீனாவுக்கு பெரும் தலைவலியாக இருக்கின்றன. ஏனெனில், உலகில் மிகப்பெரிய உற்பத்தியாளராக இருந்து வரும் சீனாவின் பொருளாதார நெருக்கடி மற்ற நாடுகளில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இத்தகைய சூழலில், உலகின் பிற நாடுகள் சீனாவின் இந்தப் பாதிப்பு குறித்துக் கவலைப்பட வேண்டிய அவசியம் உள்ளதா என்பது தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேச சிக்கலாக இருக்கிறது.ஆனாலும் இது போன்ற சிக்கல்கள் நடைமுறைக்கு மாற்றமாக மிகைப்படுத்தப்பட்ட உள்ளதாக தெரிகிறது. இருந்த போதிலும் சர்வதேச கார்ப்பரேட் நிறுவனங்கள், அவற்றின் பணியாளர்கள் மற்றும் சீனாவுடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்கள்கூட அந்நாடு எதிர்கொண்டு வரும் பொருளாதார ரீதியான பாதிப்பின் எதிரொலியாக சில எதிர்மறை விளைவுகளைச் சந்திக்க வாய்ப்புள்ளது என்பதே பெரும்பாலான பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலான வளர்ச்சிக்கு சீனாதான் காரணம். இதை நாம் கருத்தில் கொண்டால், சீனாவில் ஏற்படும் பொருளாதார மந்த நிலை, அதன் எல்லைகளுக்கு அப்பால் உணரப்படும். சீனாவின் பொருளாதாரத்தில் ஏற்படும் மந்தநிலை உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் 2024இல் ஒட்டுமொத்த உலகத்திற்கான அதன் மதிப்பீட்டையும் குறைத்துள்ளது," என்று அமெரிக்க கடன் மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தது. இருந்த போதிலும் சீனா உலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்பன போன்ற கருத்துகள் மிகைப்படுத்தப்பட்டவை என்பது பொருளாதார நிபுணர்கள் சிலரின் கூற்றாக உள்ளது.

1991 – 2001 வரையிலான பத்தாண்டு காலகட்டத்தில் ஜப்பான் மிக மோசமான பொருளாதார மந்தநிலையை எதிர்கொண்டது. இந்தக் காலகட்டத்தை 'இழந்தசகாப்தம்' (டுழளவ னுநஉயனந) என்று அழைக்கிறார்கள். ஏனென்றால், அதற்கு முந்தைய பத்து ஆண்டுகளில், அமெரிக்கா உட்பட ஏனைய வளர்ந்த நாடுகள் பொறாமைகொள்ளும் அளவுக்கு ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தது. ஜப்பானின் இந்த வளர்ச்சிக்கு அதன் ரியல் எஸ்டேட் துறை மிக முக்கிய காரணமாக இருந்தது.

1980–களில் இறுதியில் ரியல் எஸ்டேட் துறை திடீர் தேக்கம் காணத் தொடங்கியது. ரியல் எஸ்டேட் துறை தேக்கத்தால், அதில் முதலீடு செய்த நிறுவனங்களும் மக்களும் இழப்பைச் சந்தித்தனர். ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடனை வாரி இறைத்த வங்கிகள் திவாலாகின.ஜப்பானின் இருண்ட காலம் தொடங்கியது.

1989 முதல் 1992 வரையிலான மூன்றே ஆண்டுகளில் ஜப்பானில் பங்குச் சந்தை 60 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. ரியல் எஸ்டேட் மதிப்பு அடுத்த பத்து ஆண்டுகளில் 70 சதவீதம் அளவில் சரிந்தது.ஒரு நாட்டின் ரியல் எஸ்டேட் துறை பெரும் உச்சத்துக்குச் சென்று, வீழ்ச்சி அடையும்போது ஜப்பானின் இந்த வரலாற்றை நினைவுகூர்வது வழக்கம். தற்போது சீனாவை மையப்படுத்தி ஜப்பானின் இந்த வரலாறு நினைவுகூரப்படுகிறது.

கடந்த 20 ஆண்டுகளில் சீனா பொருளாதார ரீதியாக மிகப் பெரும் வளர்ச்சியை எட்டி, அமெரிக்காவுக்கு நிகரான நாடாக தன்னை நிலை நிறுத்திக்கொண்டுள்ளது. ஆனால், தற்போது சீனாவின் சாம்ராஜ்யத்துக்கு பெரும் சவால் வந்துள்ளது, ரியல் எஸ்டேட் துறை வழியாக.

சீனாவின் மொத்த ஜிடிபியில் ரியல் எஸ்டேட் துறை 30 சதவீதம் பங்கு வகிக்கிறது. அத்துறையில் சீனா மிகப் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. தற்போது அத்துறை பெரும் தேக்க நிலைக்கு உள்ளாகி இருக்கிறது.

பொதுவாக ஒரு நாட்டில் ரியல் எஸ்டேட் துறை பெரும் தேக்கத்தைச் சந்திக்கும்போது, அடுத்த பாதிப்பு அந்நாட்டின் வங்கித் துறையில் நிகழும். ஏனென்றால், ரியல் எஸ்டேட் துறை வளர்ந்துவரும் சமயத்தில் அந்நாட்டு வங்கிகள் அத்துறைக்கு கடன்களை வாரி இறைத்திருக்கும்.

அத்துறை தேக்கத்தைச் சந்திக்கும்போது கடன்கள் திரும்பி வருவது நெருக்கடிக்கு உள்ளாகும். 2008–ம் ஆண்டு அமெரிக்காவில் லேமன் பிரதர்ஸ் வங்கி திவாலானதற்கு இது அடிப்படை காரணமாக இருந்தது. அதேபோல், தற்போது சீனாவில் ரியல் எஸ்டேட் துறையின் தேக்கத்தால் வங்கிகள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன.

2020 மார்ச் மாதம் கரோனா பரவல் தீவிரமடைந்த நிலையில் உலக நாடுகள் ஊரடங்கைக் கொண்டுவந்தன. தொற்று பரவல் குறையத் தொடங்கியதையடுத்து பெரும்பாலான நாடுகள் ஊரடங்கை தளர்த்தின. ஆனால், சீனா ஊரடங்குக் கட்டுப்பாட்டை இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நீட்டித்தது. இதனால், அங்கு தொழிற் செயல்பாடுகள் முடங்கிய நிலையில், நாட்டின் பொருளாதாரம் தடுமாற்றத்தை சந்திக்கத் தொடங்கியது.

கெரோனாவுக்குப் பிறகு சீனாவில்மூன்று முக்கிய பிரச்சினைகள் தீவிரமடைந்தன.

முதலாவது. ரியல் எஸ்டேட் துறையின் தேக்கம். இரண்டாவது உள்ளூர் அரசு நிர்வாகங்களின் கடன் சுமை வரலாறு காணாத அளவில் அதிகரிப்பு. மூன்றாவது, மக்களின் நுகர்வு சரிவு. சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்தமூன்று பிரச்சினைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

சீன சட்டப்படி, நில உரிமை சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். தனியாருக்கு நிலத்தின் மீது உரிமை கிடையாது. அரசிடமிருந்து அவை நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சீன அரசுக்கான வருவாயில் நில குத்தகை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால், சீனா அந்நாட்டில் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை ஊக்குவித்தது. சீன வங்கிகள் ரியல் எஸ்டேட் துறைக்கு கடன்களை வாரி இறைத்தன.

மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி அதிக எண்ணிக்கையில் குடியேறுவார்கள் என்ற கணிப்பில் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் காணும் இடமெங்கிலும் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டியெழுப்பின. ஆனால், எதிர்பார்த்த அளவில் அங்கு குடியேற்றம் நிகழவில்லை. 2022 நிலவரப்படி சீனாவில் 2.5 கோடி அடுக்குமாடி குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. இது ஒட்டுமொத்த பிரிட்டன் மக்கள் குடியேறுவதற்கு போதுமானதாகும்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த சீன அரசு, இனியும் ரியல் எஸ்டேட் துறைக்கு வரைமுறையில்லாமல் கடன் வழங்கினால் அது பெரும் சிக்கலில் முடிந்துவிடும் என்ற நிலையில், 2020–ம் ஆண்டு கடன் வழங்கலில் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது.

இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக பெரிய நிறுவனங்கள் எதிர்கொண்டுவந்த கடன்நெருக்கடி வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தது. சீனாவின் மிகப் பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான எவர்கிராண்ட் தீவிர நிதி நெருக்கடியில் இருப்பது 2021–ம் ஆண்டு வெளிச்சத்துக்கு வந்தது. தற்போது கன்ட்ரி கார்டன் என்ற மற்றொரு பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனம் கடன் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடன் வழங்கிய நூற்றுக்கணக்கான சீன வங்கிகள் நெருக்கடியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தவிர, ரியல் எஸ்டேட் துறையின் சரிவால் உள்ளூர் நிர்வாகங்களுக்கான வருவாய் குறைந்துள்ளது. இதனால் அவற்றின் கடன் சுமை இதுவரையில் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

ரியல் எஸ்டேட் துறையின் சரிவு மக்களின் நுகர்வையும் பாதித்துள்ளது. சீன மக்களின் சேமிப்பில் 60 சதவீதம் ரியல் எஸ்டேட் துறையில் சொத்துகளாக உள்ளன. அத்துறை தேக்கம் கண்டுள்ள நிலையில் மக்களின் சொத்து மதிப்பும் சரிந்துள்ளது. இதனால், மக்கள் பணத்தை செலவழிக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளதால்,நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருள்கள் தேங்கியுள்ளன. இதனால், விலைவாசி சரிந்துள்ளது. தொழிற் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதால், வேலையின்மையும் தீவிரமடைந்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் தற்போது 'பணவீக்கம்' (ஐகெடயவழைெ) தீவிரமாக காணப்பட்டு வருகிறது. ஆனால், சீனாவில் 'பணவாட்டம்' (னுநகடயவழைெ) காணப்படுகிறது. விலைவாசி உயர்ந்தால் அது பணவீக்கம். விலைவாசி சரிந்தால் அது பணவாட்டம். விலைவாசி உயர்வைப் போலவே விலைவாசி சரிவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மக்களின் நுகர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அந்நாட்டின் ஜிடிபியில் மக்களின் நுகர்வு 70 சதவீதமாக இருக்கிறது. அதுவே சீனாவில் மக்களின் நுகர்வு 38 சதவீதமாக இருக்கிறது. முதலீடு 50 சதவீதமாக இருக்கிறது. முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழ வேண்டும். இல்லையென்றால், பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்பு ஏற்படும்.

கடந்த இருபது ஆண்டுகளில் சீனா கடன் திட்டங்கள் மூலம் முதலீட்டை மட்டுமே ஊக்குவித்து வந்துள்ளது. மக்களின் நுகர்வை அதிகரிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இதனால், முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழவில்லை. தவிர, மக்களின் தனிநபர் வருமானமும் மேம்படவில்லை.

இதனைத் தவிர்த்து வேறு சில சிக்கலாக பிரச்சினைகளையும் சீனா அரசு சந்தித்து வருகிறது.

ஆப்பிள், டெஸ்லா உட்பட உலகின் முன்னணி நிறுவனங்கள் தங்களது விநியோக தளத்தை சீனாவில் கொண்டுள்ளன. தற்போது சீனா பொருளாதார தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், சீனா தவிர்த்து இந்தியா உட்பட வேறு நாடுகளில் தங்களுக்கான விநியோக தளத்தை அமைக்கும் முயற்சியில் நிறுவனங்கள் இறங்கியுள்ளன. இது சீனாவுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் மக்கள் தொகையும் குறையத் தொடங்கி இருக்கிறது. குறிப்பாக வேலைவாய்ப்பில் பங்கேற்கக்கூடிய 15 – 64 வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை குறைகிறது.வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இது சீனாவின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக நாடுகளுடன் நேரடி வர்த்தகத்தை சாத்தியப்படுத்தும் வகையில் மாபெரும் உள்கட்டமைப்பு (டீநடவ யனெ சுழயன ஐவைையவைளைந) திட்டத்தை சீனா மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஆப்ரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நிதி நெருக்கடியில் இருக்கும் நாடுகளுக்கு பெரும் தொகையை கடனாக வழங்கியுள்ளது. தற்போது அந்நாடுகளில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அந்தக் கடன் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக அதிபராக பொறுப்பேற்றுள்ள ஜி ஜின்பிங் சீனாவை அரசியல் தளத்திலும் பொருளாதார தளத்திலும் உலகின் மையமாக தன்னை மாற்ற திட்டங்கள் வகுத்து வருகிறார். ஆனால், களச் சூழல் மிக மோசமாகிக்கொண்டிருக்கிறது.

தற்போதைய சரிவிலிருந்து சீனா எப்படி மீளப்போகிறது என்பதையும் அதன் முன் இருக்கும்சவால்களை எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பதையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் 2023 சீன மத்திய பொருளாதாரப் பணி மாநாடு (ஊநுறுஊ), கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்திர கூட்டம் நடந்தது. இந்த கூடுதலில்

வரவிருக்கும் 2024 ம் ஆண்டிற்கான நாட்டின் பொருளாதார திசை முக்கிய பங்குதாரர்களால் ஆலோசிக்கப்பட்டு தெளிவான முடிவுகள் அடிப்படையில் அநேகமான முடிவுகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த கூட்டம் முடிவுகள் 2023 டிசம்பர் 12 அன்று முடிவடைந்தது. இருதியாக 2024 ஆம் ஆண்டில் சீனப் பொருளாதாரத்திற்கான ஸ்திரத்தன்மை சார்ந்த பாதையை இந்த கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்தமாக, குறைந்தபட்சம் ஊநுறுஊ ஆலோசித்ததில் இருந்தே, வருங்கால சீன ஏற்றுமதியை குறைத்து உள்நாட்டு தேவைகள் பரிபூரணமாக நிவர்த்தி செய்த பிறகு உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது.

முக்கியமான தொழில்நுட்பத்தில் தன்னிறைவை அடைதல், ஆனால் தேவையான வர்த்தக கூட்டாளர்களுடன் ஒத்துழைத்தல், மற்றும் நிதிகளின் ஸ்திரத்தன்மை மற்றும் பணப்புழக்கத்துடன் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்தல் ஆகியவை குறித்து இந்த கூட்டம் வலியுறுத்தியது.கடந்த சில ஆண்டுகளாக சீன எடுத்த பொருளாதார நடவடிக்கைகள் குறித்தும், அதன் குறைபாடுகள் குறித்தும் பல கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்ற குறைபாடுகள் குறித்தும் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன, அவற்றின் அடிப்படையில் மிகவும் கடுமையாக கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவைப்படுவதாக முடிவு செய்யப்பட்டது

.அதே நேரத்தில் சீனா உள்நாட்டு உற்பத்தி தேவைகளை பூரணமான நிறைவேற்ற புதிய திட்டங்கள் வடிவமைப்பு செய்யப்பட்ட போதும் இந்தாண்டு 2024 ம் ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 4.6 என்கிற அளவில் குறையும் என்பதே பல்வேறு தரவுகளின் அடிப்படையில் வெளியாகி உள்ள செய்தியாகும். அதேநேரத்தில் ஐஆகு அளித்த தகவலின் அடிப்படையில் இந்தாண்டு சீனாவின் வளர்ச்சி 4.6 மூ சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு காரணம் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள வாங்கும் திறன் குறைவு மற்றும் சர்வதேச நாடுகளின் ஏற்பட்டுள்ள பணவீக்கம் மற்றும் சுணக்கம் போன்ற காரணங்களால் சீனா பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் வெளிவந்த சர்வதேச உலகின் பொருளாதார வளர்ச்சி 2024 ம் ஆண்டு 3.1 மூ இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் கொரானா காலத்திற்கு முன் சர்வதே அளவில் பொருளாதார வளர்ச்சி 3.8 மூ இருந்த நிலையில் தற்போது அது வீழ்ச்சியை நோக்கிச் சென்றுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதே போல் இந்தியா பொருளாதார வளர்ச்சி 6.7சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதம் ஆக சரிந்து உள்ளது குறிப்பிடத்தக்கது. உலகம் முழுவதும் வேலைவாய்ப்பு வெகுவாக குறைந்து வருவது என்பது தெளிவாக தெரிகிறது.

தொற்று நோய் கொரானா பாதிப்பு ஏற்பட்ட பிறகு சீனாவில் கடன் வாங்குபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நுகர்வோர் எண்ணிக்கை உள்நாட்டில் மிகவும் குறைந்து வருகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். வேலையின்மை பணவாட்டம் ஆகியவை சீனாவின் பொருளாதாரத்தை உலுக்கி எடுக்கும் காரணியாக மாறி வருகிறது. குண்டூசி முதல் விளையாட்டு பொம்மை என்று அனைத்து பொருட்கள் உற்பத்தியில் முதல் நிலையில் இருந்த சீனா அடுத்த கட்டமாக பொருட்கள் உற்பத்தியில் இருந்து மாறி உயர் தொழில்நுட்ப அளவில் தனது வல்லமையை நிறுபித்து பொருளாதாரத்தை வளப்படுத்த எண்ணிய நிலையில் அதிபர் ஜி பிங்க் எடுத்த கடுமையான நடவடிக்கைகளை எதிர் கொள்ள அந்நிய நிறுவனங்கள் சீனாவில் கால்பதிக்க மிகுந்த தயக்கம் காட்டி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து சீனாவின் சந்தையை தனதாக்கி கொள்ள இந்தியாவிற்கு மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதை சர்வதேச நாடுகள் சுட்டி காட்டி வருகின்றது. குறிப்பாக இந்திய பொருளாதார வளர்ச்சி அதன் அந்நிய முதலீடுகள் நம்பகத்தன்மை போன்றவை அரசுகளின் கொள்கை அடிப்படையில் தான் அமையும். இது சீனா மற்றும் இந்தியா ஆகிய ஆகிய தேசங்களுக்கும் உண்டு என்பதை அந்த நாட்டின் தலைவர்கள் முற்றிலுமாக உணர்ந்து கொள்ள முன் வர வேண்டும். அதேநேரத்தில், ஆசியாவில் மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக திகழும் சீனாவின் பொருளாதார சரிவு சர்வதேச அளவில் நிச்சயமாக பாதிப்பை எல்லா வகையிலும் ஏற்படுத்தும் என்பதை பொருளாதார நிபுணர்கள் சுட்டி காட்ட தவறவில்லை என்பதே இந்த கட்டுரையின் சாரம்சமாக இருக்கும் என்பதே உண்மையாகும்....

# ஞானியார் திலகம் ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா (ரஹ்)

கலீஃபா எம்.ஜே. முஹம்மது இக்பால்
BE MBA FIE Sr.MIEEE(USA) C.Engg PhD.



தரீக்கத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யாவின் ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்து அண்மையில் எம்மைவிட்டு மறைந்த ஷெய்குல் காமில்இ ஆரிஃப்பில்லாஹ், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குல வழியில் 34ஆம் தலைமுறை வாரிசாகவும் மெய்நிலை கண்ட ஞானி முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் 21ஆம் தலைமுறைப் பேரராகவும் 1937 ஆம் வருடம் டிசம்பர் 20ஆம் திகதி ஈழமணித்தீவிதன் தென்கரையில் வெலிகாமம் எனும் ஊரில் பிறந்தார்கள். உலகின் பல நாடுகளிலும் வாழும் தனது முரீதீன்களாலும் முஹிப்பீன்களாலும் வாப்பா நாயகம் என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர்கள் அறபு மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சம பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார்கள். இவர்கள் எழுதி வெளியிட்ட ஆக்கங்கள் இவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும் அபார அறபு ஆற்றலையும், ஆன்மீக உச்சத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பூர்வீகம் - வமிஷ பாரம்பரியம்

வாப்பா நாயகம் அவர்களின் தாய்வழி மூதாதையர் 250 ஆண்டுகளுக்கு முன் பக்தாதில் இருந்து தென்னிலங்கைக்கு முதன் முதல் குடியேறிய ஒரே ஒரு ஜீலானி வமிசத்தினர் என்பதும் அறியக் கூடியதாக உள்ளது. இவர்கள் காதிரிய்யாத் தரீக்கத்தின் பெரும் ஞான மகான்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது, இதுபோல் வாப்பா நாயகம் அவர்களின் தந்தைவழிப் பாட்டனாரும் காதிரிய்யா, ஷாதுலிய்யா, ஜிஃப்ரிய்யாஇ நக்ஷபந்திய்யா ஆகிய நான்கு தரீக்காக்களின் ஷெய்காகத் திகழ்ந்த இமாம், ஜமாலிய்யா முஹம்மது மௌலானா (ரலி) அவர்கள் பக்தாதின் இமாமுல் அஉளம் என்று புகழ்பெற்ற காதிரிய்யாத் தரீக்கத்தின் ஷெய்கு ஜமாலுத்தீன் அல் காதிரி (ரலி) அவர்களின் மகனாக பக்தாதில் பாபுஷ் ஷெய்க் பைதுஷ் ஷ்ரஃபாவில் பிறந்து அங்கிருந்து சன்மார்க்கப்பணிக்காக தென்னிந்தியா இலங்கை உட்பட பல நாடுகளுக்குச் சென்று இறுதியில் தென்னிந்திய சம்பைப்பட்டினத்தில் சமாதி கொண்டுள்ளார்கள். இவர்களின் மகனார் ஈழம் ஈன்றெடுத்த, இணையில்லா அறபு இலக்கியக் கலாமேதை, இமாம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா (ரலி) ஆவார்கள் இவர்களின் இளைய மகனாரே இக்கட்டுரையில் பேசப்படும் ஞான மகான் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமிய் மௌலானா ஆவார்கள்.

புகாரி ஷரீஃபுக்கு அரபியிலேயே 3000 பக்கங்களுக்குமேல் விளக்கவுரை எழுதிய ஒரே தமிழ் முஸ்லிம்இ அரபு அரபுத்தமிழ் அகராதியை இயற்றிய அறிவுமேதை, இன்ஸானுல் காமில் எனும் மெய்ஞ்ஞானப் பொக்கிஷ நூலுக்கு முழுமையாக விளக்கவிரை எழுதிய ஒரே ஒரு ஞான மகான்இ குதுபுகள் திலகம் அவர்கள்தான் வாப்பா நாயகத்தின் அருமைத் தந்தையார் ஆவார்கள்.

**உலகக் கல்வி**

தனது ஆரம்பக் கல்வியை வெலிகமை அறபா வித்தியாலயத்தில் இருந்து துவங்கிய வாப்பா நாயகம் அவர்கள் எ.எ.உ. வரை ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றாலும் தமிழ் மீது அவர்களுக்கு இருந்த தனிப்பட்ட ஆர்வத்தினால் அடுத்த ஆண்டே தமிழில் எ.எ.உ தேர்வை எழுதி தேறினார்கள். காலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் படித்து ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் பெற்றார்கள். இன்னும் தமிழில் பண்டிதப் பரீட்சையும் எழுதி தேர்ச்சி பெற்றதுடன் 1963ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரை வெலிகாமம், பண்டாரக்கொஸ்வத்தை, சிலாபம், புத்தளம், அனுராதபுரம் ஆகிய ஊர்களில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் (அதிபராகவும்), வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் (அறபு), கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார்கள். ஆசிரியராக பணிபுரிந்த வேளை ஆங்கிலம், அறபு, தமிழ் இலக்கணம், இலக்கியம், இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் போன்ற பாடங்களை மாணவர்களுக்கு போதித்துள்ளார்கள். அரச பணியில் இருந்த போதும் ஆன்மீகப் பணியையும் முன்னெடுத்து வந்தார்கள் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின் முழுமையாக ஆன்மீகப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

மார்க்கக் கல்வி

ஆலிமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரலி) அவர்களால் நஹ்வில் புலி என்று போற்றப்பட்ட அவர்களின் சீடர் அஹ்மது அலி (ரஹ்) அவர்களிடத்தில் கற்றுத்தேர்ந்து பின் லாகூர் பல்கலைக் கழகத்தில் மௌலவி பாஜில் பட்டமும் இ தேவ்பந் கலாசாலையில் பாஜிலே அஉலா பட்டமும் பெற்ற, இலங்கை கல்வித்திணைக்களத்தின் அறபுப் பரீட்சைப் பிரிவின் முன்னாள் தலைவரும், அரபு-அர்வி காமூஸ் எனும் அகராதியை இயற்றியவரும் புஹாரி ஷரீபுக்கு 4 பாகங்களாக அரபியில் விளக்கவுரை எழுதியவரும், தமது ஆத்மீக உயர்வை எடுத்துக்காட்டும் முகமாக "யவானிஉ" கிதாபை தந்தருளியவரும், மற்றவர்களும் ஆத்மீக துறையில் படித்து முன்னேற்றமடைய ரிஸாலா கௌதிய்யாவைத் தமிழாக்கம் செய்தவரும்இ இன்ஸானுல் காமில் எனும் ஞானப் பொக்கிசத்திற்கு அறபியில் விளக்கவுரை எழுதிய ஒரே அறிஞருமானஇ நடமாடும் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்த தனது அன்புத் தந்தையான அல் ஆரிபுபில்லாஹ், அல் முஹத்திஸ், குதுபுல் பரீத், இமாம், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களே இவர்களுக்கு ஆசானாக இருந்து அறபியில் அனைத்துக் கலைகளையும் கற்றுக்கொடுத்தார்கள்.

யாஸீன் மௌலானா நாயகம் அவர்கள் தமது குடும்பத்தின் தகப்பன் வழியால் காதிரிய்யாத் தரீக்காவின் கிலாபத்துப் பெற்று காதிரிய்யாவின் ஷெய்காகவும் தமது தந்தை ஷெய்கு ஜமாலிய்யா முஹம்மது மௌலானா (ரலி) அவர்கள் மூலம் ஷாதுலிய்யாஇ ஜிஃப்ரிய்யா, நக்ஷபந்திய்யா ஆகிய மூன்று தரீக்காக்களுக்கான கிலாபத்தையும் பெற்றிருந்தார்கள். தரீக்காக்களின் நோக்கம் ஒன்றே என்பதை வலியுறுத்தும் முகமாக தரீக்காக்களுக்கிடையிலான வேற்றுமையை நீக்கி தாம் பெற்ற இந்நான்கு தரீக்காக்களின் கிலாபத்தையும் ஒருங்கிணைத்து தௌஹீதுடைய மஃரிபா ஞானத்தை முதன்மைப்படுத்தி காதிரிய்யாவின் கிளையாக ஹக்கிய்யத்துல் காதிரிய்யா எனும் சூஃபி ஞானவழியை அறிமுகம் செய்து அதன் ஷெய்காகவும் திகழ்ந்தார்கள் ஆகையால் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களும் தனது தந்தையாரின் மூலமாக இஸ்லாமிய கல்வியையும் ஞானக்கல்வியையும் கற்று நான்கு தரீக்காக்களின் கிலாபத்தையும் பெற்று தம் தந்தையின் மறைவின் பின் 1966ஆம் ஆண்டில் இருந்து ஆன்மீகத் தலைவராகக் கடமையாற்றி வந்தார்கள்.

**ஆன்மீகப் பணி**

"மனிதனை மனிதனாக வாழவைப்பதே அற்புதம் அதனையே எம் பாட்டனார் முஹம்மது (ஸல்)அவர்கள் செய்தார்கள் அதுதான் "ஷரீஅத்" என்று கூறி அதை தானும் பேணி ஏனையவர்களுக்கும் அடிக்கடி வலியுறுத்துபவராக இருந்தார்கள். குறிப்பாக ஷரீஅத்தைப் பேணி ஐந்து நேரத் தொழுகையையும் பஜ்ருடைய நேரத்தில் குர்ஆன் ஓதுவதையும் கடைபிடித்து வரும்படியும் கட்டளையிட்டுள்ளார்கள்.

நபிமார்கள் வலிமார்கள் முஹ்ஜிசாத்இ கராமத் எனும் அற்புதங்களை நிகழ்த்துவார்கள் அதில் மேன்மையான அற்புதம் யாதெனில்இ தன்னை அறிந்து தன் நாயனை அறியும் அறிவை மக்கள் மத்தியில் போதித்து நல்ல பண்பாடுடைய சமுதாயத்தை உருவாக்குவதாகும். அற்புதம் நாடி என்னிடன் வரவேண்டாம் அறிவு வேண்டியே என்னிடம் வாருங்கள் என்றும், எமக்கு ஆயிரக்கணக்கான சீடர்கள் தேவையில்லை உண்மையுள்ள பத்து சீடர்கள் இருந்தாலே போதும் என்று அறிவுக்கும் உண்மைக்கும் நேர்மைக்கும் வாப்பா நாயகம் முதலிடம் கொடுத்து வந்தார்கள். அதனடிப்படையில் இறை அறிவாம் மஹ்ரிஃபத்துல்லாஹ் எனும் அறிவைப் போதித்து, அல்லாஹ்விடத்தில் கொடிய பாவமான ஷிர்க் எனும் இணைவைப்பை நீக்கி மானிடர் மத்தியில் ஜாதி மத, இன வேறுபாடு, உயர்ந்தவன் தாழ்ந்தவன்இ பணக்காரன் ஏழை படித்தவன் பாமரன் எனும் வேறுபாட்டை நீக்கி அன்பால் பண்பால் ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணிக்காக "ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை" என்ற பெயரில் ஒரு ஆன்மீக அமைப்பை இலங்கை. இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் நிறுவி அதனூடாக தமது சீடர்களுக்கு மார்க்க ஞானம் கற்றுக்கொள்வதன் அவசியத்தைப் போதிப்பதுடன் உலகக் கவியியையும் கற்று வாழ்வில் முன்னேற தன்னம்பிக்கையை வழுப்படுத்தும் உபதேசங்களை செய்து உலமாக்கள்இ விஞ்ஞானிகள், வைத்தியர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள், முனைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சட்டத்தரணிகள், பட்டயக் கணக்காளர்கள், பட்டதாரிகள், கல்வியியலாளர்கள், தொழிலதிபர்களை என அனைத்துத் துறைகளிலும் ஞான அறிவுடன் கூடிய உயர் பண்புகளைக் கொண்ட சீடர்களை உருவாக்கிவிட்டு சீரிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பி வழிநடத்திச் சென்றுள்ளது இவர்களின் மகத்தான சமூக சீர்திருத்தப் பணியாகும், இப்பணியின் ஆரம்ப முன்னெடுப்பாக அநாதை மற்றும் கல்வி கற்க வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு முற்றிலும் இலவசமாக மார்க்கக்கல்வியையும் உலகக் கல்வியையும் கற்று வாழ்வில் ஜயம் பெற 30 வருடங்களாக திருச்சியில் "மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன்" என்ற பெயரில் ஓர் அறபுக் கல்லூரியை நிறுவி அதை நடாத்திவருவதுடன் இதில் கல்விகற்கும் மாணவர்களை மேலும் பல கலைகளிலும் பட்டம் பெற்று வெளியாக்கும் நோக்கத்துடன் இம்மத்ரஸாவை ஒரு கலாபீடமாக மாற்றி சர்வகலாசாலையாக விஸ்தரிக்கும் பணியும் நடைபெற்று வருவதுடன் இம்மத்ரஸாவின் பிரதம ஆலோசகராக உலகப் புகழ்பெற்ற மார்க்க அறிஞர்இ அஃப்ழலுல் உலமாஇ கலாநிதி. ஆ.ஷெய்கு அப்துல்லாஹ் (ஜமாலி) M.A, Ph.D அவர்கள் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இம்மத்ரஸாவை மையமாக வைத்து

தமது பிள்ளையை சர்வதேச பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசையில் உள்ள நடுத்தர மக்களின் நோக்கத்தை நிறைவேற்றும் முகமாக அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் எனும் பெயரின் நவீன வசதிகளுடன் கூடிய ஆங்கில மொழிமூல பாடசாலையை நிறுவியுள்ளார்கள்.

ஏழை எழியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கிலும் இயற்கை அனர்த்த வேளைகளின் போது உடலாலும் பொருளாலும் உதவியலைச் செய்ய அவ்னிய்யா எனும் பெயரில் உலக அமைதி அறக்கட்டளை ஒன்றையும் நிறுவி இப்பணி பல்லாண்டு காலமாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

மக்களின் மார்க்க ரீதியான பிரச்சினைகளை நிவர்த்திசெய்து அதற்கான தெளிவுகளை வழங்குவதற்கு ஒரு ஜம்இய்யதுல் உலமாவை நிறுவியதுடன் வாப்பா நாயகத்தின் அனுமதியுடன் யாஸீனி மௌலவிகள் பேரவை எனும் அமைப்பும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சத்திய மார்க்கத்தையும் சத்திய ஞானத்தையும் கருப்பொருளாகக் கொண்டு அன்றாட வாழ்வியலுக்குத் தேவையான அம்சங்களையும் மக்களுக்கு அறியச் செய்யும் முகமாக "மறை ஞானப் பேழை" எனும் மாத இதழை ஆரம்பித்து தொடர்ந்து 40 ஆண்டுகளாக வெளியீட்டு வந்துள்ளார்கள். இது இதழியல் துறைக்கான இவர்கள் ஆற்றிய முக்கிய பங்களிப்பாக கருதப்படுகிறது. தமிழ் இலக்கியத்திற்கும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி அவைகளை சமூகமயப்படுத்தி இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் முகமாக ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் அங்கமாக ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கம் என்று ஒரு அமைப்பை நிருவியுள்ளார்கள்.

**மெய்ஞ்ஞான மற்றும் தமிழ் இலக்கியப் படைப்புக்கள்.**


மஃரிபா ஞானம் என்ற பெயரால் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைக்கு மாற்றமான கருத்துக்களுடன் கலந்து போதிக்கப்படும் இக்காலத்தில் தூய ஆத்ம ஞானத்தை மக்களின் உள்ளத்தில் அக்கலைதொடர்பாக நிழவும் அச்சத்தை போக்கி தெளிவாகவும் இலகுவாகவவும் நடைமுறை பேச்சுவடிவில் கற்றுக் கொடுப்பதில் வாப்பா நாயகம் அபாரத் திறமையுள்ளவர்கள் அந்தவரிசையில் ஆத்ம ஞான அறிவின் ஆரம்பத்தாரத்தில் இருந்து மேலே உயர்த்திச் செல்லும் வகையில் வாசித்து கற்றுக்கொள்வதற்காக பேரின்பப்பாதையும் ஹகாஇகுஸ்ஸபா எனும் நூலை பரமார்த்தத் தெளிவு எனும் பெயரில் மொழிபெயர்த்து விளக்கவுரையும்இ துஹ்பதுல் முர்ஸலா எனும் நூலை அனுப்பப்பட பரிசு எனும் பெயரில் தமிழாக்கமும் விளக்கமும், ரிலாஸா கௌதிய்யா எனும் நூலுக்கு தமிழ் விளக்கவிரையும், கலந்துரையாடல் வடிவில் தாகி பிரபம் எனும் பெயரில் ஆத்மஞான ஆராய்ச்சிக்குரிய நூலையும், யாத்திருப்பதுடன், ஆத்ம ஞானிகள் தாம் பெற்ற ஆத்மீக அனுபவம் எனும் பேரின்பத்தை வெளியாக்குவது குறிப்பிடத்தக்கது, அந்த வகையில் வாப்பா நாயகம் அவர்கள் தமது ஆத்மீக பேரின்ப அனுபவத்தை இறையருட்பா எனும் பெயரில் தமிழில் மெய்ஞ்ஞான இலக்கியப் பாடல்களாக வெளியாக்கியுள்ளார்கள் (இப்பாடல்கள் பிரசித்திபெற்ற பாடகர்களான எஸ்.பி பாலசுப்ரமணியன், மனோ, முரளி, நித்யஸ்ரீ, உன்னிமேனன், விஜய் ஜேசுதாஸ், தேவராஜ் ஆகியோரின் குரலில் இசையுடன் வெளிவந்துள்ளது), இன்னும் தனது ஆத்மீக அனுபவத்தை அறபு பைத்துக்களாக (பாடல்களாக) கஸீததுல் அஹ்மதிய்யா ஃபீ நஷீததில் அவ்னிய்யா என்ற பெயரில் வெளியாக்கியுள்ளார்கள். மக்கள் கருத்தறிந்து ஓதுவதற்காக திருக்குர் ஆனை தமிழாக்கமும் விளக்கவுரையும் எழுதியுள்ளார்கள் (முதல் ஜுஸ்உ வெளிவந்துள்ளது). இன்னும் பதுறு மௌலித்இ பர்சஞ்ஜிய் மௌலித் ஆகியவற்றை தமிழாக்கம் செய்ததுடன் அதன் அறபி பாக்களுக்கு ஏற்றவிதத்தில் தமிழ்ப் பாக்களையும் இயற்றியுள்ளார்கள். இவர்கள் இயற்றிய அறபு ஆக்கங்கள் வரிசையில் இமாம் பூசிரி (ரஹ்) அவர்களின் 2 அடிகள் கொண்ட கஸீதா தொகுப்பான முஹம்மதிய்யாவுக்கு மேலும் 3 அடிகள் சேர்த்து தக்மீஸ் முஹம்மதிய்யா எனும் பெயரில் 5 அடிப் பாக்களாக இயற்றியும், மௌலித் செய்யித் யாஸீன் மௌலானா எனும் பெயரில் தமது தந்தை மீது அறபியில் ஒரு மௌலிதை யாத்துள்ளார்கள்இ இன்னும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் யா நபியல்லாஹ் யா ரசூலல்லாஹ் எனும் பிரபல அறபுப் பாடலையும் இவர்களே இயற்றினார்கள் இவற்றைப் பார்ப்பதன் மூலம் வாப்பா நாயகத்தின் அபார அறபு ஆற்றலை அவதானிக்க முடியும். இஸ்லாமிய நாகரிகம் கற்கும் மாணவர்களுக்கு கையேட்டு நூல்கள் இல்லாத ஆரம்ப காலத்தில் அப்பாஸியாக்கள் என்ற நூலையும் இயற்றினார்கள்.

பெருமானார் மீதும் இறைநேசர்கள் மீதும் அன்பை வெளிப்படுத்தும் முகமாக நாயகர் பன்னிரு பாடல் எனும் பெயரிலும் (தனது முதல் நூலான 12இ 12 பாடல்களாக வாப்பா நாயகம் இயற்றிய இந்நூல் தமிழ் இலக்கியத்தில் புதுவகை பிரபந்தத்தை துவங்கிவைப்பதாக பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சு.வித்யானந்தன் அவர்கள் குறிப்பிடுகிறார்)இ பன்னிரண்டு நாளிதே என்று துவங்கும் சமூக வலைதளங்களில்உலாவரும் கஸீதாப் பாடலான நபிகள் நாயகம் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களின் தொகுப்பாக அமைந்த அற்புத அகில நாதர் எனும் கவிதை நூலையும்இ பாத்திமா நாயகியார் மாலைஇ இறை வலிய் செய்யித் முஹம்மது மௌலானாஇ குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா எனும் பெயர்களில் மரபுக் கவிதைகளாக தெவிட்டாத தேன் தமிழில் யாத்தளித்துள்ளார்கள்இ மக்கள் தெளிவுபெற ஒளியை மறைக்கத் துணியும் தூசுஇ நபிவழி நம்வழிஇ உண்மை விளக்கம்இ மருள் நீக்கிய மாநபி போன்ற கொள்கைவிளக்க நூல்கள் பலவற்றையும் யாத்துள்ளார்கள். உபதேச ரத்தினங்களையும் பொதிந்து மனிதாஇ அருள்மொழிக் கோவை எனும் அமுதமொழிகள் தொகுப்பையும் அருளியுள்ளார்கள்.

மரபுக் கவிதை மற்றும் சங்கத்தமிழ் மீதான அதீதப் பற்றின் விளைவாக தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும்இ கவிதை உரைநடைஇ செய்யுள்இ பாடல்இ நூல்களையும் இயற்றிப் பதிப்பித்து வந்துள்ளார்கள். அக்கவிதை வடிவங்களைக் காக்கும் விதத்தில் தமது ஏராளமான நூல்களை இவ்வடிவங்களில் வெளியாக்கினார்கள் அதற்குச் சான்றாக மகானந்தலங்கார மாலை எனும் சித்திரக்கவி நூலையும் இயற்றியுள்ளார்கள் இவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்கு இது எடுத்துக்காட்டாக உள்ளது.

ஐங்குறுநூறு வரிசையில் குறிஞ்சிச் சுவை என்றும் பாலைவனம் என்றும் இலக்கிய உரைநடை நூல்களையும்இ நாட்டு வளத்தையும் நாட்டுப் பற்றையும் சமூக இன நல்லுறவையும் ஏற்படுத்தும் முகமாக ஈழ வள நாட்டிற் பயிர் பெருக்க வாரீர் எனும் கிராமியப் பாடல் வடிவில் கவிதைத் தொகுப்பையும் இயற்றினார்கள் இது சாகித்திய மண்டல விருது பெற்றதுஇ மேலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியபரப்பில் சீறாப்புராணத்தின் மரபில் இக்காலத்தில் ஒரு புராணத்தை உமர் ரலி புராணம் எனும் பெயரில் யாத்தளித்த இவர்கள் சிறுவர் பாடல்களையும் இயற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறள் தந்த திருவள்ளுவருக்கு பத்துப் புகழ்க் குரளாக இயற்றியுள்ளார்கள். இவர்கள் ஒரு புலவர் மட்டுமல்ல தற்கலை பீர் முஹம்மத் அப்பா, குணங்குடி மஸ்தான் சாஹிபு, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் போன்ற தமிழில் இஸ்லாமிய சூஃபி ஞானம் பாடிய ஆத்மீக சித்தர் வரிசயிலும் அறபியில் மஃரிபா எனும் தத்துவ ஞானம் போதித்த முகியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி, இமாம் இப்னுல் அரபி, சூஃபி ஞானி ஜலாலுத்தீன் ரூமி, அப்துல் கரீம் ஜீலிய் ஆகியோரின் வரிசையில் வைத்து நோக்க வேண்டிய மெய்ஞ்ஞானத் தமிழ் சூஃபி சித்தர் என்று கூறின் அது மிகையாகாது. நபிகள் நாயகம் அவர்களின் வமிசத்தில் தோன்றிய வாப்பா நாயகம் அவர்களும் நபிகளாரைப் போன்றே உயர்ந்த குணப் பண்புகளை கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள் அறிவிலும் ஆளுமையிலும் ஆதி உச்ச நிலையில் இருந்தும் எந்தவித பெருமையும் ஆனவவும் அற்றவர்களாக அடக்கத்துடனும் பணிவுடனும் பெரும் பண்பாளராகத் திகழ்ந்து இவ்வுலக வாழ்வை விட்டும் மறைந்தார்கள். தனது தந்தை யாஸீன் நாயகம் அவர்கள் வாப்பா நாயகத்தை இவ்வாத்மீகப் பாதையை வழிநடாத்துவதற்கு சிறு பருவத்தில் இருந்தே தன்னகத்திருக்கும் அனைத்துக்கலைகளையும் கற்றுக்கொடுத்து தமது ஆத்மீக ஞானப் பாட்டையை வழினடாத்துவதற்குரிய தலைவராக எவ்வாறு உருவாக்கினார்களோ அவ்வாறே வாப்பா நாயகம் அவர்களும் இவ் ஆத்ம ஞானப் பாதையை தனக்குப்பின் வழிநடாத்துவதற்கு தமது பேரப்பிள்ளையான ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் அலி மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்களுக்கு தம்மகத்திருக்கும் அனைத்துக் கலைகளையும் தாமே கற்றுக்கொடுத்து உலகக் கல்வியையும் கற்றுத்தேரா வழியமைத்து இந்தத் தரீக்காவை வழிநடத்தும் சிறந்த தலைவராக (ஷெய்காக) உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாப்பா நாயகத்தின் தமிழ் ஆக்கங்களில் இருக்கும் சங்ககாலச் செய்யுள் வடிவத்தையும் அதே நேரம் எளிய தமிழ் நடையில் அமைந்த கவிதை இயற்றும் ஆளுமைக்கு சில எடுத்துக்காட்டுக்களை தருகிறேன்.



## பெருமானார் வழிநின்ற பெருமான்

பெருமானார் பரம்பரையில் இலங்கை மண்ணில்
பிறந்தார்கள் வெலிகமையில் அவுன்மௌ லானா
அரியபெருந் தொண்டாற்றி முதுமை யேற்றே
அருளாளன் பக்கலுற்றார் அறிவில் மேதை
உருவத்தில் எமையவர் தோற்றம் எந்த
உடையலங் காரமுமே இலாது மற்றோர்
விரும்புகின்ற முகப்பொலிவு சாந்த சீலர்
வரித்தவரை அன்புடனே அணைத்த நல்லார்

அரபோடு தமிழ்மொழியை ஆழக் கற்றே
அற்புதமாம் நூல்கள்பல அளித்த மேதை
பொற்புறுமே அத்தனையும் படிப்போர் நெஞ்சில்
புடம்போட்ட சொர்ணமென விளங்கல் சாலும்
அரபுத்தமிழ் அகராதி செய்த ளித்தார்
"அர்வி"யெனும் புதுமொழிக்கும் ஆக்கம் சேர்த்தார்
கரந்தந்தார் மொழிவளரக் கலீல்மௌ லானா
காசினியில் மிகச்சிலரே இவர்போ லம்மா!
கற்றதமிழ்க் கோன்மையினால் கவிதை யாப்புக்
குன்றாமல் மரபுப்பா கணக்கில் லாதே
சொற்சிறப்பும் கவிநயமும் செறிந்தி லங்கச்
செய்ததவர் ஆளுமையைச் சுட்டிச் செப்பும்
முற்றிலுமே கடினமான "நாக பந்தம்"
முதற்கொண்டு "சித்திரப்பா" வடித்த வல்லார்
வற்றாத மொழிப்புலமை வித்த கர்தான்
வரலாற்றில் பதம்பதித்த ஆத்ம ஞானி

ஆத்மீக வழிதன்னைப் பிற்கா லத்தில்
அடியொற்றி முற்றிலுமே தன்னை ஈந்தே
நீத்துவுயிர் பிரியுமட்டும் நிலைத்து நின்றார்
நபிவழியே தன்வழியாய் ஏழ்மை காத்தார்
கோத்தளிதார் பற்பலவும் குர்ஆன் சுன்னாக்
கூற்றுகளைப் பாமரரும் கற்றுத் தேர
வார்த்தைகொண்டும் விளக்கிவைத்தார் சொற்பெ ருக்கால்
வரலாற்றில் பெயர்கொண்டார் வரலா றானார்

பற்பலவாம் நாடுகளில் மௌலா னாவின்
பாதவழி தொடருகின்ற "முரீது"ப் பேர்கள்
சொற்பமல்ல சொல்லுதற்குத் தொகையில் விஞ்சும்
தாய்மண்ணில் தமிழகத்தில் அமீர கத்தில்
முற்றிலுமே கற்றறிந்தோர் வழிதொ டர்ந்தார்
முறையான வழிகாட்டல் எனவு ணர்ந்தே
தற்பெருமை மேட்டிமையும் இல்லாப் பண்பர்
தலைசிறந்த ஞானரவர் அவுன்மௌ லானா

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# முறைகேடான வளச் சுரண்டல்

# மன்னாரில் வலுக்கும் எதிர்ப்பு!



ஆதில் அலி சப்ரி

"நம் நாடே புறப்படு, மன்னாருக்குப் புறப்படு... கடத்தாதே, கடத்தாதே, கறுப்பு மணலைக் கடத்தாதே... வெளியேறு, வெளியேறு, தீவை விட்டு வெளியேறு..."

இலங்கையின் மன்னார் தீவில் சூட்சுமமாக மேற்கொள்ளப்படவுள்ள கனிய மணல் அகழ்வுத் திட்டத்திற்கு பொதுமக்களின் எதிர்ப்பு வலுத்து வருகின்றது. தனியார் கம்பனிகள் போட்டி போட்டுக் கொண்டு சூரையாட முயற்சிக்கும் கனிய மணல் வளத்தைப் பாதுகாக்கக் கோரி, மன்னார் தீவில் உள்ள சிவில் அமைப்புகள், சூழலியல் அமைப்புகள், மதத் தலைவர்கள் உட்பட பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தன் போது இளைஞர் குழுவொன்று முன்வைத்த கோசங்களையே, இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் காணலாம்.

இலங்கையின் வடமேற்குக் கரையில் அமைந்துள்ள மன்னார் தீவு, பல்வேறு இயற்கை வளங்களும் பொதிந்துள்ள பூமியாகும். 143 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட மன்னார் தீவில் 65 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மன்னாரில் உள்ள இயற்கை வளங்கள் தீவுக்கு பல வழிகளிலும் வலுச் சேர்ப்பதைப் போன்றே, தீவை ஆபத்துகள் சூழ்ந்துகொள்ளவும் வழிவகுக்கின்றன.

மன்னார் தீவில் பொதிந்துள்ள கனிய மணல் வளத்தை அகழ்வதற்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் 50 க்கு அதிகமான அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது. இந்த அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவதற்கு அவுஸ்திரேலிய மற்றும் இந்திய தனியார் கம்பனிகள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கின்றன. இவ்வாறான தனியார் கம்பனிகள் பல்கலைக்கழக ஆய்வு என்ற போர்வையில் சில ஆண்டுகளாகவே மன்னாரில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளன. இவ்விடயம் மக்களின் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே, தனியார் கம்பனிகள் ஆய்வுப் பணிகளை முடக்கிக்கொண்டுள்ளன.

இதேநேரம், மக்கள் தமது காணிகளை கனிய அகழ்வுகளை மேற்கொள்ளும் தனியார் தரப்பினருக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. பெரும்பாலானவர்கள் தமது காணிகளை மணல் அகழ்வுக்காகக் கொள்வனவு செய்யப்படுகின்றது என்ற தெளிவின்றியே விற்பனை செய்துள்ளனர். இவ்வாறு, 4000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பை கனிய மணல் அகழ்வுடன் தொடர்புடைய தனியார் தரப்பினர் சூட்சுமமாகக் கையகப்படுத்தியுள்ளனர்.




கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் மூலம் மன்னார் தீவும் பிரதேச மக்களும் எதிர்கொள்ளவுள்ள அபாயங்களைப் பொருட்படுத்தாமல் இலங்கை அரசாங்கமும் அரச அதிகாரிகளும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்த மணல் அகழ்வுத் திட்டத்தினால் ஏற்படும் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் தாக்கங்களை சூழலியல் நீதிக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே விவரிக்கையில்,

"ஆரம்பமாக அவுஸ்திரேலிய கம்பனியும், இப்போது இந்தியாவின் மாஸ் மினரல்ஸ் பிரைவட் லிமிடடும் மன்னார் தீவின் இரண்டு பகுதிகளிலும் மணல் அகழ்வுக்கான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

மன்னார் என்பது ஒரு மண்பாங்கான தீவு. இந்தத் தீவில் கனிய மணல் அகழ்வுகள் இடம்பெற்றால், கடல் நீர் தீவுக்குள் ஊடுருவும் அபாயம் காணப்படுகின்றது. கடல் நீர் ஊடுருவுவதால் மக்களின் இருப்பிடம், வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் வளங்குள் பாதிப்படையும் அபாயம் நிலவுகின்றது. அதேபோன்று, பிரதேசத்தின் உயிரியல் பல்வகைமையும் வனவிலங்குகளின் இருப்பும் கேள்விக்குள்ளாகும். சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் தாக்கங்களைப் புரிந்துகொள்ளாமல் இந்தப் பூமி சூரையாடப்படுவதை மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கக் கூடாது."



ஹேமந்த விதானகே

இதேநேரம், மன்னாரில் மீன்பிடி நடவடிக்கைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு 10 ஆயிரத்துக்கு அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தீவின் 50 சதுர கிலோ மீட்டர் அளவிலான கரையோரப் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு கரையோரப் பகுதிகளில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், தமது இயல்பு வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தல் நிலவுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



திலக் காரியவசம்

"மக்கள் அபிவிருத்தியை எதிர்ப்பவர்கள் அல்ல. ஆனால், மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையிலான திட்டங்களால் எவ்வாறு அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியும்? இங்கு கொண்டுவரப்படும் திட்டங்கள் யாவும் மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைப்பதாகவே அமைந்துள்ளன. கனிய மணல் அகழ்வு நடவடிக்கையில் அவுஸ்திரேலிய, இந்திய மற்றும் ஏனைய கம்பனிகளுக்கும் நாம் எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறான திட்டங்களைக் கைவிடுமாறு நாம் அரச தரப்பிடமும் கேட்டுக் கொள்கிறோம்" என்று உணவைப் பிரதானமாகக் கொண்ட தகவல் மற்றும் நடவடிக்கைகளுக்கான இலங்கை வலைப்பின்னலின் பணிப்பாளர் திலக் காரியவசம் தெரிவித்தார்.

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு நடவடிக்கை மூலம் மக்களுக்கோ, கடல் வளத்துக்கோ எவ்வித பாதிப்புகளும் ஏற்படப் போவதில்லை என்று டைடேனியம் சேன்ட்ஸ் லிமிடட் தெரிவித்துள்ளது. மேலும், பிரதேச மக்களுக்கு 1200க்கு மேற்பட்ட தொழில்வாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இயற்கை மணல் வளம் என்பது பல்வேறு சுற்றுச் சூழல் அமைப்புகளின் பிரதான அம்சமாகக் கருதப்படுவதோடு, ஒரு நிலப்பரப்பின் சமநிலையையும் சீராகப் பாதுகாக்கின்றது. இந்தத் திட்டம் மன்னார் தீவின் 2ஃ3 பங்கு மக்களின் வாழ்வியலை வெகுவாகப் பாதிக்கும் என்பதே சூழலியல் ஆய்வாளர் களின் கருத்தாக இருக்கிறது. மேலும், தீவின் 63 வீதமான பகுதி கடல் அரிப்புக்கும் எதிர்பாராத வெள்ள அனர்த்த த்திற்கும் உள்ளாகும் அபாயம் நிலவுவதோடு, வனவிலங்குகளின் வாழ்வியல் உட்பட உயிரியல் பல்வகைமையின் அழிவுக்கும் இந்தத் திட்டம் காரணமாக அமையலாம்.

வளங்களின் முறைகேடான சுரண்டல் எமது எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கும் நீண்ட கால தாக்கங்களைக் கொண்டது. எனவே, இந்த மணல் அகழ்வுத் திட்டம் முழுமையாக கைவிடப்பட வேண்டும் என்று பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கின்றனர்.

# தேசிய ஷூரா சபை ஏற்பாட்டில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வு








(ராபி சிஹாப்தீன்)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு "இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு" எனும் தலைப்பில் தேசிய ஷூரா சபையினால் ஏற்பாடு செய்யப்பட நிகழ்ச்சி புதன்கிழமை (07) கொழும்பு-07, ஜே.ஆர்.ஜெயவர்தன நிலையத்தில் நடைபெற்றது.

தேசிய சூரா சபையின் தலைவர் சட்டத்தரணி ரீ.கே.அஸூர் அவர்களது தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விசேட பேச்சாளர்களாக வல்பொல ராகுல நிறுவனத்தின் பணிப்பாளர் கல்கந்தே தம்மானந்த தேரர், முன்னால் வெளிநாட்டு தூதுவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர், ஜாமியா நளீமியாஹ் கலாபீடத்தின் இஸ்லாமியா கற்கைகளுக்கான பிரிவின் தலைவர் அஷ்ஷைக் எஸ்.எச்.எம்.பளீல், தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியில் அனைத்து இனங்களையும் சேர்ந்த அறிஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கை முஸ்லிம்களது சிவில் சமூக அமைப்புகளது குடை நிறுவனமாக தேசிய சூரா சபை செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை நாட்டின் இனங்களுக்கிடையிலான ஐக்கியம், புரிந்துணர்வு, சமாதான சகவாழ்வு, தேச ஒருமைப்பாடு என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் தேசிய சூரா சபை முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் உரிமைகள் என்பவற்றை பேணும் வகையில் கலந்தாலோசனை மற்றும் நிபுணத்துவ புத்திஜீவித்துவ சபையாகவும் செயற்பட்டு வருகிறது.

# லிட்டில் ரோஸ் பாலர் பாடசாலை விடுகைவிழா



மன்னார், முசலி, வேப்பங்குளம் லிட்டில் ரோஸ் பாலர் பாடசாலையின் விடுகைவிழா திங்களன்று (05) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம். பைறுஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முசலி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் உவைஸ், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர், மன்னார் மாவட்ட மரண விசாரனை அதிகாரி நசீர், பாலர் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் அமீருன் நிஸா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பள்ளி பரிபாலன சபைத் தலைவர்கள், நிர்வாகிகள் உட்பட ஊர்ப்பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# இல்முன் நூர் விஷேட தேவையுடைய பாடசாலை மாணவர்களின் சுதந்திர தின நிகழ்வு



(பேருவளை பீ.எம் முக்தார்.

தர்கா நகர் சீனாதுறையில் இயங்கும் இல்முன் நூர் விஷேட தேவையுடைய பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் 76வது சுதந்திர தின நிகழ்வு நேற்று 3 ஆம் திகதி தர்கா நகர் அல் – ஹம்ரா மகா வித்தியாலய நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்காவில் அதிபர் நூர் ரிஸ்வியா தலைமையில் நடைபெற்றது. தர்கா நகர் ரிம்ஸான் ஹாஜி பவுண்டேசன் செயலாளரும் பிரபல சமூக சேவையளருமான பாஸி ஸுபைர் பிரதம அதிதியாகவும் மற்றும் அல் ஹாஜ் ஏ.ஆர் எம் அபாம், முஹம்மத் ஹுஸைன் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். விஷேட தேவையுடைய சிறார்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதோடு பரிசில்களும் வழங்கப்பட்டன. பாடசாலை பணிப்பாளர் நூர் ஹலீமா உட்பட தர்கா நகரில் உள்ள பாலர் பாடசாலை, சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் விஷேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

விஷேட தேவையுடைய மாணவர்கள் 45 பேருடன் இல்முன் நூர் பாடசாலை தர்கா நகர் சீனா துறை பள்ளிவாசல் வளவில் சிறப்பாக இயங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



## தமிழ் மக்களை மிரட்டியோ விரட்டியோ

# மட்டு. முஸ்லிம்கள் காணி அபகரிக்கவில்லை

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம்தொடர் – 13)

சகல சமூகங்களோடும் குறிப்பாக தமிழ் கல்விச் சமூகத்தோடு நட்புறவைக் கொண்டிருக்கும் மூத்தறிஞர், எழுத்தாளர் மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். ஹனீபா, எல்லா சமூகங்களுக்கும் வன்முறையாளர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளை வரலாற்றுச் சான்றுகளோடு பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்பவர்.

அவர், தமிழ் சமூக கடும்போக்காளர்களால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை மேலும் விவரிக்கிறார்,

மட்டக்களப்பு மாவட்டம் சுமார் 2650 சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கொண்டது. இம்மாவட்டத்தில் சுமார் 66 வீதம் இந்து மக்களும் சுமார் 28 வீதம் முஸ்லிம்களும் 06 வீதம் கிறிஸ்தவ மக்களும் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த காணிப்பரப்பில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நான்கு பிரதேச செயலகங்கள் உள்ளன. அவை நான்கும் வெறும் 16 சதுர கிலோ மீற்றர் காணிகளை மாத்திரம் உள்ளடக்கிய நிர்வாகப் பரப்பாகவே உள்ளது.

2000ம் ஆண்டு அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட “பனம்பலான ஆணைக்குழு, அதன் சிபாரிசின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளை உருவாக்கியது.

இதில் ஒரு பிரதேச செயலாளர் பிரிவு கோறளைப்பற்று தெற்கு எனப்படும் கிரான். மற்றையது கோறளைப்பற்று மத்தி எனப்படும் வாழைச்சேனை முஸ்லிம் பிரதேச செயலளார் பிரிவு.

இப்பிரதேச செயலாளர் பிரிவுகளை உருவாக்கும்போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவு 686 சதுர கிலோமீற்றர் பரப்பில் தோற்றுவிப்பதற்காக இணக்கம் காணப்பட்டு, அதற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் நிர்வாகத்திலிருந்த 5 கிராம சேவகர் பிரிவுகளை முஸ்லிம்கள் விட்டுக்கொடுத்தனர்.

இன்று வரை அந்த 5 கிராம சேவகர் பிரிவுகளும் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் கீழ் வர்த்தமானி செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஏன் மட்டக்களப்பை ஆளும் நிருவாக அதிகார மட்டத்தினர் மறைக்கிறீர்கள்? மக்களுக்கு சொல்வதற்கு மறுக்கிறீர்கள்.? என்று மட்டக்களப்பை நிருவகிக்கும் நிருவாக உயர்மட்டத்தைப் பார்த்துக் கேள்வி எழுப்புகிறார்.

அதேபோன்று, கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை முஸ்லிம் பிரதேச செயலகத்தை உருவாக்குவதற்கு குறிப்பாக வாகரைப் பிரதேசத்திலிருந்த முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த புணாணை கிழக்கு உள்ளடங்கலான கிராம சேவகர் பிரிவுடன் சேர்த்து 240 சதுர கிலோமீற்றர் காணியை நிர்வாகப்பரப்பாக நிர்ணயித்திருந்தனர்.

இப்பிரேரணை அமைச்சரவைக்கு ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு, அனுமதி சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு, பின்னர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதனை இந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர்களும் நடைமுறையில் திட்டமிட்டு வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்து, முஸ்லிம் சமூகத்துக்கெதிராக நிருவாக அநியாயத்தினைச் செய்திருக்கிறார்கள்.

அதாவது, ஒரே ஆணைக்குழுவின் இரண்டு சிபாரிசுகள் சமூகத்துடனான விட்டுக்கொடுப்புடன் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளை அமைச்சு சரியாக நடைமுறைப்படுத்துமாறு தங்களுக்கு அறிவுறுத்தியிருந்தும், மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக அதிகாரிகள் என்ன செய்தீர்கள் என்பதை மறந்து விட்டீர்களா?

கிரான் பிரதேச செயலகத்தை சரியாக, குறிப்பிட்ட பரப்புக்கு உருவாக்கி நடைமுறைப்படுத்த ஓட்டமாவடி பிரதேச செயலகத்திலிருந்து அதற்குரிய 5 கிராம சேவகர் பிரிவுகளையும் ஆணைக்குழு பரிந்துரைத்தவாறு பிரித்தெடுத்து கிரானுக்கு வழங்கிவிட்டீர்கள்.

அது பிரச்சினையில்லை. அது உடன்பாடு கண்ட விடயம். அதனால் முஸ்லிம்கள் அதை ஏற்றுக் கொண்டனர். தமது நிர்வாக பிரதேசத்தின் கீழிருந்த ஐந்து கிராமசேவகர் பிரிவுகளையும் கிரான் உருவாக்கத்திற்கு விட்டுத் தந்தனர்.

அதற்கு மாற்றாக வாகனேரி, புணாணை மேற்கு, வடமுனை, ஊத்துச்சேனை, கள்ளிச்சை ஆகிய அந்த 5 கிராம சேவகர் பிரிவுகள் கிரான் பிரதேச செயலக நிருவாகத்தின் கீழிருந்தாலும் கூட அவை மறுபுறம் இன்றுவரை ஓட்டமாவடி பிரதேச சபையின் கீழிருக்கிறது என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

ஆனால், அதே நேரம் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தை உருவாக்கும்போது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பது ஞாபகமிருக்கிறதா?

வாழைச்சேனை மத்தி முஸ்லிம் பிரதேச செயலகத்திற்கு ஆணைக்குழு பரிந்துரைத்த 240 சதுர கிலோ மீற்றருக்குப் பதிலாக வெறும் 6 சதுர கிலோமீற்றர் பரப்பை மட்டுப்படுத்தி அமைச்சரவை தீர்மானத்திற்கும் அமைச்சின் அங்கீகாரத்திற்கும் முரணாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தமை எந்த வகையில் நியாயமெனக் கருதுகிறீர்கள்?

இங்கு உங்களுடைய அதிகார கபடத்தனத்தை முஸ்லிம்களுக்கெதிராக எப்படியெல்லாம் மிகவும் கச்சிதமாகச் செய்துள்ளீர்கள் என்பதை விளங்கிக் கொண்டீர்களா?

ஓட்டமாவடியிலிருந்து எடுக்க வேண்டிய 148 சதுர கிலோமீற்றர் பரப்புடைய 5 கிராம சேவகர் பிரிவுகளையும் கிரானை உருவாக்க எடுத்துக்கொண்ட அதேநேரம், வாழைச்சேனை மத்தியை உருவாக்கும்போது வாகரையிலிருந்து பிரித்துக் கொடுக்க வேண்டிய புணாணை கிழக்கு உட்பட்ட 240 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொடுக்காமல் திட்டமிட்டு மறைத்ததன் மூலம் தாங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு இரு பக்கத்தீமையைச் செய்திருக்கிறீர்கள்.

அதிலொன்று ஏற்கனவே இருந்ததைச் சுரண்டிக் கொண்டது. மற்றையது, கொடுக்குமாறு சிபாரிசு செய்ததையும் கொடுக்காமல் தடுத்துக் கொண்டது.

இவ்விவகாரத்தை கடந்த 24 வருடமாக இழுத்தடிப்புச் செய்து வருகிறீர்கள்.

பனம்பலான ஆணைக்குழுவின் சிபாரிசுகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்த முனையும்போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் உயரதிகாரிகளும் இரட்டை வேடத்தைக் கையாளுகிறீர்கள்.

கிரான் பிரதேச செயலகத்தின் உருவாக்கத்திற்கு ஆணைக்குழுவின் சிபாரிசினை சரி காணுகின்ற அதேவேளை, வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகத்தின் உருவாக்கத்தில் ஆணைக்குழு தவறென்று சொல்கிறீர்கள். இது எந்த அடிப்படையில் பொருந்தும்?

சரியென்றால், இரண்டுக்கும் சரியாக அமைய வேண்டும். தவறென்றால் இரண்டு பிரதேச செயலகங்களுக்கும் தவறாக அமைய வேண்டும். இது தானே இயற்கையின் நியதி.

நீங்கள் சொல்வதைப்போன்று ஆணைக்குழு தவறாக இருந்தால், ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கின்ற கிரான் பிரதேச செயலகத்தை கலைப்புச் செய்வதற்கு உடன்படுகிறீர்களா? என்று உங்களிடம் வினவுகிறேன்.

அதேபோன்று, இந்த மாவட்டத்திலுள்ள ஏனைய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மூன்று பிரதேச செயலகங்களான ஓட்டமாவடி, காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பிரதேச செயலகங்களின் வர்த்தமானி செய்யப்பட்ட காணிகளின் பரப்பளவில் வேண்டுமென்றே அத்துமீறி மற்றைய பிரதேச செயலகங்கள் சூறையாடுவதற்கு தாங்களும் தங்களுக்கு முன்பிருந்த மாவட்ட அரச நிர்வாகமும் கைகோர்த்துச் செயற்பட்டது.

இந்த விவகாரம் சூடுபிடித்திருந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச நிருவாகப் பாரபட்சம் என்பதை மறுதலித்திருந்தார்.

அந்த விடயம் நாடாளுமன்றம் வரை எதிரொலித்திருந்தது.

அது குறித்தும் மூத்தறிஞர் எஸ்எல். எம். ஹனீபா சிலாகித்துப் பேசினார், மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுக் கொண்டே வரும் நிருவாகப் பாரபட்சங்களைத் தெளிவான ஆவணங்கள், ஆதாரங்களை முன்வைத்து நாடாளுமன்ற விவாதத்தில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதற்கு முறையாக பதிலளிக்க முடியாமல் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் இராஜபுத்திரன் சாணக்கியன் திணறியதையும் எல்லோரும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பொதுவாக நடுநிலையான, மனிதாபிமான சிந்தனையுள்ள எந்தத் தமிழ் சகோதரனும் உங்களின் இவ்வாறான அநீதியைச் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்பதையும் இவ்விடத்தில் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அடிப்படையைத்தான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்கள் மாவட்ட அரச நிர்வாகம் முஸ்லிம் பிரதேச செயலகங்களின் காணியைக் களவாடியது என்ற வார்த்தைப் பிரயோகத்தைச் செய்யத்தூண்டியது.

இவ்விடத்தில் களவு என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் தாங்கள் மிகவும் மனவுளைச்சலுக்குள்ளானதும் வியாக்கியானம் பொருள்கோடல் அடிப்படையில் இவ்வார்த்தைப் பிரயோகம் முறையற்றது என்பது போன்றும் தங்களுடைய ஆதங்கத்தைக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

தங்களின் பொருள்கோடலின்படி களவு என்பது ஒருவரின் உரிமையை இன்னொருவர் முறைகேடாக அபகரித்துக் கொள்ளுதல் என நீங்களே குறிப்பிட்டுள்ளீர்கள்.

அதன்படி முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான வர்த்தமானி செய்யப்பட்டு நிர்வாகத்திற்கு உரித்தாக்கப்பட்ட உரிமையான காணிகளை அத்துமீறி தவறான வரைபடங்களை உருவாக்கி, தங்கள் நிர்வாக எல்லைக்குள் அருகிலுள்ள தமிழ்ப்பிரதேச செயலகப்பிரிவுகளை உள்ளடக்கியிருப்பது உங்களின் பொருள்கோடலின் படியே களவென்று சொல்லலாம் தானே” என்றும் கூறி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் எஸ்எல்எம். ஹனீபா.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம்தொடர் வரும் வாரமும் வரும்)

# முஸ்லிம் திணைக்கள ஏற்பாட்டில் மிஃராஜ் தின நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் மிஃராஜ் இரவு தினம் கொழும்பு 6 கெஹவலக் டவுன் உள்ள முஹியத்தீன் ஜூம்ஆப் பள்ளிவாசலில் நேற்று இரவு 7 ஆம் திகதி இஷாத் தொழுகையின் பின்னர் நடைபெற்றது.

இந் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலக பணிப்பாளர் இசட் ஏ.எம். பைசால், தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பௌத்த சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் (பா.உ) மொஹிதீன் ஜு/ம்ஆப் பள்ளிவாசல் பிரதான இமாம் அஷ் ஷேக் வரிதீன் (நூாரி) துஆப் பிரார்த்தனை அஷ்ஷேக் எம். நுஸ்ரத் ஹக்கானி நிகழ்த்தினார்கள். இப் பிரதேச வாழ் முஸ்லிம்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்

## ரமழானில் முஸ்லிம் அரச ஊழியர்களின் சமய வழிபாடுகளுக்கு சலுகை

(எம்.ஐ.எம்.அஸ்ஹர் )

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசியலமைப்புச் சபை தலைவர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை விடுத்து இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருட ரமழான் நோன்பு மாதம் மார்ச் 12 ஆம் திகதி முதல் ஏப்ரல் 11 ஆம் திகதி வரை அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில், அக்காலப்பகுதியில் முஸ்லிம் அரச உத்தியோகத்தர்கள் சமய வழிபாடுகளை மேற்கொள்ள கூடிய வகையில் பணி அட்டவணையை தயாரிக்குமாறு குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே விசேட விடுமுறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
உதயம் வாசகர் கருத்து
உதயத்தின் வெளிச்சம் உலகெங்கும் பரவி நிலைக்க அல்லாஹ் அருள்வானாக!
– சில்மியா ஹாதி –





பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 90 ஆவது கட்டமாக, மினுவாங்கொடை,கல்லொலுவ,அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு (08) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# காத்தான்குடி பிரதேச கலை இலக்கிய விழா - 2023



(எம்.பஹுத் ஜுனைட்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், காத்தான்குடி பிரதேச செயலக கலாசார அதிகாரசபை மற்றும் கலாசாரப் பேரவை இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா அண்மையில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் திரு.யூ.உதயஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி.ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திரு.சரவணமுத்து நவநீதன் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலைஞர்களின் நிகழ்வுகள் , கலை, இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மொழிபெயர்ப்பு, பன்முக ஆளுமை, கவிதை, அறிவிப்பு,இசை ஆகிய ஆறு துறைகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டதுடன் ஸம் ஸம் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

## சுதந்திர தின நாடகம் !!

கடந்த பெப்ரவரி 4-ம் திகதி இலங்கையில் மூன்று விதமான சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன. எப்போதும் போல் காலி முகத்திடலில் நாட்டின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து சம்பிரதாய முறையில் இத்தனை பொருளாதார நெருக்கடிக்கும் மத்தியில் சுதந்திர தினத்தை வெகு கோலாகலமாக கொண்டாடியது. அடுத்த குழு "எங்கே சுதந்திரம்?" என்ற கேள்வியை கேட்ட வண்ணம் கொழும்பிலும் நாட்டிலே இன்னும் சில பகுதிகளிலும் தமது எதிர்ப்பை தனியாகவும் குழுக்களாகவும் வெளிப்படுத்தி இருந்தனர். அதிலே குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் கொழும்பிலே அமைதியாக "எங்கே சுதந்திரம்?" என்ற கேள்வி கேட்கப்பட்ட அதே நேரம் கிளிநொச்சியில் சுதந்திர தினத்தை எதிர்த்து நடாத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்திற்கு பொலீசார் கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் தாக்குதல் நடாத்தியதுடன் நான்கு பல்கலைக்கழக மாணவர்களையும் கைது செய்திருந்தனர். கொழும்பிலே சுதந்திரமாக சுதந்திர தினத்தை எதிர்க்க கூடிய நிலை இருந்தாலும் கிளிநொச்சியில் இன்னும் அதற்கான சுதந்திரம் வழங்கப்படவில்லை.

மூன்றாவது சுதந்திர தின நிகழ்வு தான் இங்கே அடிக்கோடிட்டு ஆராய வேண்டியது. அது நடைபெற்றது யாழ்பாணத்தில். ஏற்பாட்டாளர் யாழ் சிவில் சமூக நிலையத்தின் தலைவர் அருண் சித்தார்த். பிரதான விருந்தினர்கள், சிங்களவர்களுக்கான ஒரே நாடு இலங்கை என மார்தட்டிக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. சிங்கள பௌத்தர்களிடம் பெயர் பெற்ற தொல்பொருள் திணைக்களத்தின் சட்டங்களையே மீறி தெற்கிலே சிறுபான்மை முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களை அபகரித்து அவர்களின் வாழும் உரிமையை கேள்விக்குறியாக்கி அங்கே பாரிய விகாரைகளை கட்டுவதில் முன்புறமாக ஈடுபட்டுள்ள பிக்கு நெல்லிகல தேரர் மற்றும் இறுதியாக பதும் கேர்னல். பதும் தெற்கிலே தனக்கான ஒரு ரசிகர் மன்றத்தையே வைத்துள்ளார். அரசியலுக்கு வருவதற்கு முன்பே நன்றாக சந்தர்ப்பவாத அரசியலை பத்தும் செய்தும் வருகின்றார்.

விடயம் இதுதான். இலங்கையில் சொற்களையும் விற்கலாம். அதிலே அதிக விலைக்கு விலை போகக்கூடிய ஒரு சொல் தான் "சகவாழ்வு". தெற்கிலே சிங்களம் பேசக்கூடிய ஒரு சிறுவனும் வடக்கிலே தமிழ் பேசக்கூடிய ஒரு சிறுவனும் ஒருவரை ஒருவர் சந்திப்பதை புகைப்படம் எடுப்பது தான் சகவாழ்வு என பலரும் நினைக்கின்றார்கள். அதைவிட வேறொன்றும் அவர்களுக்கு தெரியாது. இல்லாவிட்டால் செய்ய மாட்டார்கள். அருண் சித்தார்த்தை பொறுத்தவரையில் "அருண் தமிழ் மக்களிடையே காணப்படுகின்ற ஜாதி வேறுபாடுகளை சுட்டிக்காட்டி அதிலிருந்து காட்டிக் கொடுக்கும் அரசியல்" செய்வதாக பலரும் அருணை விமர்சிக்கின்றார்கள். அதுமட்டுமின்றி "யுத்த காலத்தில் அருண் யாழ்ப்பாணத்தில் இருக்கவே இல்லை என்பதுடன் தனக்கு சிங்களம் பேச முடியும் என்ற ஒரே காரணத்தால் தெற்கிலே இருக்கின்ற சிங்களவர்களை தமது கைக்குள் வைத்துக் கொண்டு ஒரு சில அரசியல்வாதிகளின் கையாளாக அருண் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக" இன்னும் சிலர் விமர்சிக்கின்றார்கள்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச முதல் ரணில் வரை அனைவரும் அழகாக விற்பனை செய்த ஒரு சொல் இந்த "சகவாழ்வு". அரச சார்பற்ற நிறுவனங்கள் பணத்தை வாரி வழங்கும் ஒரு மந்திர சொல் இது. யாழ் தேவியில் யாழ்ப்பாணம் செல்வதும் வேட்டி அணிந்து நல்லூர் செல்வதும் யாழ் நூலகத்திற்கு முன் இருந்து புகைப்படம் எடுப்பதுமே, அவர்களின் சகவாழ்வு? வடக்கிலே இன்னும் இராணுவத்திடம் தமிழ் மக்களின் நிலங்கள் காணப்படுகின்றன. இந்நாட்டிலே இன்றும் காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்களின் போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. முல்லைத்தீவு மனித புதைக்குழி இன்னும் யாருடையது என்று தெரியவில்லை. தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் பலவந்தமான முறையில் இன்னும் விகாரைகள் கட்டப்பட்டு கொண்டுதான் இருக்கின்றன. சக வாழ்வின் சுதந்திர தினத்திற்கு வந்த சரத் வீரசேகரவின் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு சென்ற முல்லைத்தீவு நீதிபதி டி.சரவணராஜா வையும் நான் ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன். இங்கே அநீதி இழைக்கப்பட்ட தமிழ் மக்களின் வேண்டுகோள் "எங்களுக்கான நியாயத்தை தந்துவிட்டு நீங்கள் சமாதானம் பற்றி பேசுங்கள்" என்பதாகும். அதற்கு அரசாங்கம் இன்னும் செவி சாய்ப்பதாக இல்லை. முள்ளிவாய்க்கால் முதல் செம்மணி மனிதப் புதைகுழி வரை இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. நாள்தோறும் மக்கள் நீதி கேட்டு போராடுகின்றார்கள். அது அவ்வாறிருக்க "உங்களுக்கு அநியாயம் எதுவும் இழைக்கப்படவில்லை. இது சிங்கள பௌத்த நாடு" என தேசியவாதம் பேசுகின்ற பெரும்பான்மை இனவாதிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து தேசிய கொடியை அசைத்தவாறு சுதந்திர தினத்தை கொண்டாடுவது என்பது கேளிக்கையாக உள்ளது.

அருண் சித்தார்த் இப்போது சிங்கள மக்கள் மத்தியில் சகவாழ்வின் சின்னமாக மாறி உள்ளார். அருண் வடக்கின் முதலமைச்சர் என்ற அளவிற்கு சிங்கள மக்கள் அருணை கொண்டாடுகிறார்கள். அந்த அத்தனை கொண்டாட்டங்களினதும் பின்னால் அவர்களின் ஆழ்மனதில் இருப்பது, "நாங்கள் ஆள்பவர்கள் நீங்கள் ஆளப்படுபவர்கள்" என்பது மட்டுமே. இது ஒரு தேர்தல் வருடமாக உள்ளது. எதிர் வருகின்ற மாதங்களில் பல தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. இந்த அனைத்துக்கும் மத்தியில் இவ்வாறான ஒரு சுதந்திர தின கொண்டாட்டம் ஏன் என்ற கேள்வியை நாங்கள் கேட்க வேண்டும். இந்த அத்தனை நாடகங்களுக்கும் பின்னால் இருப்பதை நீங்கள் புரிந்து கொண்டால் இரவு நீங்கள் விழுந்த அதே குழியில் பகலில் திரும்பவும் விழாமல் தப்பிக்கலாம்.

ஆனால் ஒன்று, இத்தனைக்கும் மத்தியில் கடந்த காலங்களில் யாழ்ப்பாண மக்கள் உரிமைக்காக போராடிய எத்தனையோ ஆர்ப்பாட்டங்களின் போதெல்லாம் பொலிஸ்ஸாரிடம் அடி வாங்கியுள்ளார்கள். ஆனால் இன்று தென்னிந்திய நடிகை தமன்னாவுக்காக அவர்கள் அடி வாங்குவதை நினைக்கும் போதுதான் மிகவும் பெருமையாக உள்ளது..!!

### தென்கிழக்கு...

(முதலாம் தொடர்ச்சி)

மண்டபத்தில் ஆரம்பமானது.

இன்றைய இந்நிகழ்வுகள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் தலைமையிலும் இடம்பெற்றது.

பட்டமளிப்பு விழாவின் முதல் அமர்வின் விஷேட பேச்சாளராக அமெரிக்க-இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்து கொண்டு உரையாற்றினார்.

அத்துடன் இன்று (11) நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது அமர்வுகளில் வர்த்தக முகாமைத்துவ பீடம் மற்றும் வெளிவாரி பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரை நூற்றாண்டில் அறிவொளி; நளீமிய்யவாவின் நாற்பெரும் விழா

**பேருவளை பீ.எம்.முக்தார்**

இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பரப்பில் அரை நூற்றாண்டு காலம் அறிவொளி பரப்பி தென்னிலங்கையில் தலை நிமிர்ந்து கொண்டிருக்கும் பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடம் கடந்த வருடம் 2023இல் அதன் பொன்விழாவைக் கொண்டாடின. அதன் மற்றுமோர் அங்கமாக கலாபீட நிர்வாக சபையும் ராபிததுன் நளீமியின் பேருவளை வளையமும் இணைந்து எதிர்வரும் 11ஆம் திகதி (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நாற்பெரும் விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் மர்ஜான் பளீல் பிரதம அதிதியாகவும் ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட பரிபாலன சபைத்தலைவர் அல் ஹாஜ் யாகூத் நளீம் விஷேட அதிதியாகவும் கலாபீட முதல்வர் அஷ் ஷெய்க் ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

மேற்படி கலாபீடத்தின் 50ஆவது நிறைவையொற்றிய நிணைவு முத்திரை வெளியீடு, நளீம் ஹாஜியாருடன் நளீமிய்யா உருவாக்கத்திற்கு இணைந்து உளைத்த ஸ்தாபகர்களை கௌரவிக்கும் ஸ்தாபகர் தினம் நளீமிய்யாவின் வரலாற்று நூல் வெளியீடு மற்றும் ஸோலார் பவர் சூரிய சக்தி மின் உற்பத்தித்திட்டம் அங்குரார்ப்பணம் என்பன இதன் போது இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேருவளையில் பிரபல கொடை வள்ளல் நளீம் ஹாஜியாரின் தலைமையில் அங்குள்ள இதர சில தனவந்தர் பெருமக்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் ஒன்றினைப்போடு 1973-08-19ஆம் திகதி ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் உதயமாகியது.

இன்று அது அகவை ஐம்பதை நிறைவு செய்து 51ஆவது அகவையில் கால் பதிக்கறது.ஐம்பது வருடங்களாக நளீமிய்யா சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஏன் சர்வதேசத்துக்கும் ஆற்றியுள்ள அரும்பணிகளோ ஏராளம்.அங்கு கற்று வெளியாகிய 1000க்கும் மேற்பட்ட கல்வி மாண்களே இதற்கு தக்க சான்றாக உள்ளார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையை பின்னோக்கிப் பார்த்தால்,

இலங்கையில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, எகிப்து நாட்டில் புரட்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒராபி பாஷா மற்றும் கண்டி நகரைச் சேர்ந்த அறிஞர் சித்தி லெப்பை ஆகியோர் இணைந்து எடுத்த முயற்சியின் விளைவாக இலங்கை முஸ்லிம்களின் கல்வியில் மறு மலர்ச்சி காண ஆரம்பித்தது.

கி.பி.1800களில் இறுதிப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம்களுக்கென பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை ஆனால் திருக்குர் ஆனை ஓதக் கற்கவும்,சன்மார்க்க நடை முறைகளைத் தெரிந்து கொள்ளவும் கூடிய குர்ஆன் பள்ளிக் கூடங்கள் கிராம முஸ்லிம் பெரியார்களின் வீடுகளிலும்,பள்ளி வாசல்களிலும் திண்ணெப் பள்ளிக் கூடங்களாக இயங்கிவந்தன.

1890களின் பின்பே முஸ்லிம் பாடசாலைகள் கொழும்பிலிருந்து முளைக்க

ஏ.எம்.தாஸீன் (நத்வி) கடமையாற்றினார்.
விரிவுரையாலர்கலாக வெளிநாட்டவர்களும் அப்போதிருந்தே பணியாற்றி வந்தனர். உள்நாட்டைச் சேர்ந்த மர்ஹூம் மௌலவி மீரான் மர்ஹூம் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எச். சாஹூல் ஹமீத் (பஹ்ஜி) உள்ளிட்ட பலர் முழு நேர போதனைப் பணிகளில் கடமையாற்றி வந்தனர்.

சுமார் 50 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு நாளடைவில் மாணவர், மற்றும் போதனாசிரியர் தொகைகளிலும் விரிவாக்கம் நிகழ்ந்து கொண்டே வருவதும் இதன் வளர்ச்சிக்கு சான்றாகவுள்ளது. கலாபீடத்தை பல்வேறு வழிகளிலும் கட்டியெழுப்புவதில் பல தசாப்த காலமாக கலாபீட பணிப்பாளர் மர்ஹூம் எம்.ஏ.எம் சுக்ரியாற்றிய பணி

இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பரப்பில் அரை நூற்றாண்டு காலம் அறிவொளி பரப்பி தென்னிலங்கையில் தலை நிமிர்ந்து கொண்டிருக்கும் நாட்டுக்கும் ஏன் சர்வதேசத்துக்கும் ஆற்றியுள்ள அரும்பணிகளோ ஏராளம். அங்கு கற்று வெளியாகிய 1000க்கும் மேற்பட்ட கல்விமான்களே இதற்கு தக்க சான்றாக உள்ளார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையை பின்னோக்கிப் பார்த்தால்,

இலங்கையில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, எகிப்து நாட்டில் புரட்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒராபி பாஷா மற்றும் கண்டி நகரைச் சேர்ந்த அறிஞர் சித்தி லெப்பை ஆகியோர் இணைந்து எடுத்த முயற்சியின் விளைவாக இலங்கை முஸ்லிம்களின் கல்வியில் மறு மலர்ச்சி காண ஆரம்பித்தது.

கி.பி.1800களின் இறுதிப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம்களுக்கென பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை ஆனால் திருக்குர்ஆனை ஓதக் கற்கவும், சன்மார்க்க நடை முறைகளைத் தெரிந்து

நளீமிய்யாவின் பணிகள் அமைந்துள்ளன.

அந்த வகையில் அறிஞர் சித்தி லெப்பை அதன் பின் 1960களில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் என்ற வரிசையில் 1973இல் ஜாமிஆ நளீமிய்யாவே இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சியில் புதியதொரு மைல் கல்லை கடந்து வீறு நடை போடும் முஸ்லிம்களின் கல்வி நிலையமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

1970 - 72களில் இக் கலாநிலையத்துக்கான பாடத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கான குழுவொன்று அமர்த்தப்பட்டது. மௌலவி ஏ.எல்.எம்.இப்ராஹிம், மௌலவி மர்ஹூம் ஏ.ஆர்.ரூ/ஹல் ஹக் மௌலவி எம்.ஜே.எம்.ரியாழ் உள்ளிட்டோர் இக்குழுவில் அங்கம் வகித்து பாடத்திட்டம் மற்றும் பாட நூல்கள் போன்றவற்றை வகுத்துக் கொடுத்தனர்.

இதன் முதல் அதிபராக மர்ஹூம் மௌலவி ஏ.எம்.தாஸீன் (நத்வி) அவர்கள் கடமையாற்றினார்.













நளீமிய்யாவின் கற்கை நெறி ஏழு வருடங்களைக் கொண்டதாகும். முதல் மூன்று வருடங்களைக் கொண்ட அடிப்படை கற்கைகள் பிரிவில் அரபு மொழி, அரபு இலக்கணம், தர்பியா, ஃபிக்/ஹல் ஸ/லூக், தஜ்வீத் சட்டங்கள், குர்ஆன் மனனம், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிப் பாடங்களுடன் க.பொ.த உயர்தரம் கலைப் பிரிவுக்கான பாடங்களும் கற்பிக்கப்பட்டு உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்படுத்தப்படுகின்றனர்.

இஸ்லாமிய கற்கைகள் பீடம் நான்கு வருடங்களைக் கொண்டதாகும். இப் பிரிவில் மாணவர்களுக்கு குர்ஆன், சுன்னா விளக்கங்களும் அவற்றோடு தொடர்பான கலைகளும், இபாதத், குடும்பம், வியாபாரம், நீதித்துறை, பாகப்பிரிவினை என்பவற்றோடு தொடர்பான இஸ்லாமிய சட்டங்களும் அகீதா, முஸ்லிம்கள் இலங்கையில் சிறுபான்மையினராக வாழ்வதால் இலங்கையின் பன்மத, பல்லின கலாசார சூழமைவை கருத்திற் கொண்டு சமாதான கற்கைகள், இஸ்லாமிய வங்கியியல், சிறுபான்மையினருக்கான வாழ்வொழுங்கு, பிரதான மதங்கள், அவற்றின் ஒப்பீட்டாய்வு போன்ற பாடங்களும், தர்க்கவியல், சமூகவியல், இஸ்லாமிய உலகின் சிந்தனைப் பாங்குகள், தஸவ்வுப், இல்முல் கலாம், தத்துவம், ஸீரா, இஸ்லாமிய வரலாறு என்பனவும், தகவல் தொழிநுட்பத்தோடு தொடர்பான பாடங்களும் ஆங்கிலம், அரபு, சிங்களம் போன்ற மொழிகளும் போதிக்கப்படுகின்றன.

இலங்கையின் அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழக மொன்றின் பட்டப்படிப்பை வெளிவாரியாக மேற்கொள்வதற்கு மாணவர்கள் இக்காலப்பிரிவில் தயார்படுத்தப்படுவதோடு இதற்கான ஊக்குவிப்பும் வழிகாட்டல்களும் இங்கு வழங்கப்படுகின்றன. இதனால் நளீமிய்யாவின் பட்டதாரிகளாக வெளியேறுபவர்கள் ஏககாலத்தில் அதன் உள்ளக கற்கை நெறியையும் வெளிவாரிப் பட்டப் படிப்பையும் பூர்த்தி செய்யும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

மாணவர்களது எழுத்து பேச்சாற்றல், மென்திறன்கள், மொழி, விளையாட்டுத் திறன்கள் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கோடு ஜாமிஆவின் வெளிக்களப் பிரிவு இயங்கி வருகிறது.

“ராபிதா கலமிய்யா“ என்ற பெயரில் வாரா வாரம் இயங்கும் சுவரொட்டிப் பத்திரிகை மூலம் மாணவர்கள் தம் எழுத்தாற்றல்களை வளர்த்துக் கொள்கின்றனர். அத்துடன் காலத்துக்குப் பொருத்தமான கருப்பொருட்களில் விசேட கருத்தரங்குகளும் பயிற்சிப் பட்டறைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

ஜாமிஆ வின் நூலகம் ஆங்கிலம், தமிழ், சிங்களம், அரபு ஆகிய மொழிகளில், சுமார் 50,000த்திற்கும் மேற்பட்ட நூல்களையும், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வறிக்கைகள், என்பனவற்றையும் உள்ளடக்கிய பாரிய வாசிகசாலையாக விளங்குகிறது. இது ஜாமிஆ வின் விரிவுரையாளர்ளுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் கைகொடுத்துதவுகிறது.

ஆரம்பித்தன.இவ்வாறு தலை நகரிலிருந்து தலை யெடுத்து நாட்டின் நாலா பகுதிகளிலும் தோற்றம் பெற்றுள்ள அரசினர் அன்மை காலத்தில் தணியார் கல்வி நிலையங்கள் யாவும் உலகாயத கல்விக் கூடங்கள்.என்றும் குர்ஆன் பள்ளிக் கூடங்களை ஆன்மீகக் கல்விக் கூடங்கள் என்றுமே எமது சமூகத்தினர் இன்று வரையும் எடைபோட்டு வருகின்றனர்.ஆனால் இஸ்லாமே கல்வியை ஆன்மீகம் லௌக்கம் என்று பிரித்துப் பார்ப்பதில்லை.இந்த இரண்டு கல்வித் துறைகளையும் ஓறே குடையின் கீழ் கொணர்ந்து பொதுவான கல்விக் கூடமாக விளங்கும் ஓர் உன்னத கலாப்பீடமாகவே ஜாமியா நளீமிய்யாவின் பணிகள் அமைந்துள்ளன.

அந்த வகையில் அறிஞர் சித்தி லெப்பை அதன் பின் 1960களில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் என்ற வரிசையில் 1973இல் ஜாமிஆ நளீமிய்யாவே இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சியில் புதியதொரு மைல் கல்லை கடந்து வீறு நடை போடும் முஸ்லிம்களின் கல்வி நிலையமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

1970 - 72களில் இக்கலாநிலையத்துக்கான பாடத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கான குழுவொன்று அமர்த்தப்பட்டது.மௌலவி ஏ.எல்.எம்.இப்ராஹிம்,மௌலவி மர்ஹூம் ஏ.ஆர்.ரூ/ஹல் ஹக் மௌலவி எம்.ஜே.எம்.ரியாழ் உள்ளிட்டோர்.இக்குழுவில் அங்கம் வகித்து பாடத்திட்டம் மற்றும் பாட நூல்கள்,போன்றவற்றை வகுத்துக் கொடுத்தனர்.

இதன் முதல் அதிபராக மர்ஹூம் மௌலவி

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடம் கடந்த வருடம் 2023 இல் அதன் பொன்விழாவைக் கொண்டாடியது. அதன் மற்றுமோர் அங்கமாக கலாபீட நிர்வாக சபையும் ராபிததுன் நளீமியின் பேருவளை வளையமும் இணைந்து எதிர்வரும் 11 ஆம் திகதி (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நாற்பெரும் விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் மர்ஜான் பளீல் பிரதம அதிதியாகவும் ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட பரிபாலன சபைத்தலைவர் அல் ஹாஜ் யாகூத் நளீம் விஷேட அதிதியாகவும் கலாபீட முதல்வர் அஷ் ஷெய்க் ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

மேற்படி கலாபீடத்தின் 50ஆவது நிறைவையொற்றிய நினைவு முத்திரை வெளியீடு, நளீம் ஹாஜியாருடன் நளீமிய்யா உருவாக்கத்திற்கு இணைந்து உழைத்த ஸ்தாபகர்களை கௌரவிக்கும் ஸ்தாபகர் தினம் நளீமிய்யாவின் வரலாற்று நூல் வெளியீடு மற்றும் ஸோலார் பவர் சூரிய சக்தி மின் உற்பத்தித்திட்ட அங்குரார்ப்பணம் என்பன இதன் போது இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேருவளையில் பிரபல கொடை வள்ளல் நளீம் ஹாஜியாரின் தலைமையில் அங்குள்ள இதர சில தனவந்தர் பெருமக்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் ஒன்றிணைப்போடு 1973-08-19 ஆம் திகதி ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் உதயமாகியது.

இன்று அது அகவை ஐம்பதை நிறைவு செய்து 51 ஆவது அகவையில் கால் பதிக்கிறது.

ஐம்பது வருடங்களாக நளீமிய்யா சமூகத்துக்கும்

Golden Jubilee
Since 1973
JAMIAH NALEEMIAH
50 Years of Excellence in
Islamic Studies & Human Sciences

கொள்ளவும் கூடிய குர்ஆன் பள்ளிக் கூடங்கள் கிராம முஸ்லிம் பெரியார்களின் வீடுகளிலும், பள்ளி வாசல்களிலும் திண்ணைப் பள்ளிக் கூடங்களாக இயங்கிவந்தன.

1890களின் பின்பே முஸ்லிம் பாடசாலைகள் கொழும்பிலிருந்து முளைக்க ஆரம்பித்தன. இவ்வாறு தலை நகரிலிருந்து தலையெடுத்து நாட்டின் நாலா பகுதிகளிலும் தோற்றம் பெற்றுள்ள அரசினர் அண்மை காலத்தில் தனியார் கல்வி நிலையங்கள் யாவும் உலகாதாய கல்விக் கூடங்கள் என்றும் குர்ஆன் பள்ளிக் கூடங்களை ஆன்மீகக் கல்விக் கூடங்கள் என்றுமே எமது சமூகத்தினர் இன்று வரையும் எடைபோட்டு வருகின்றனர். ஆனால் இஸ்லாமே இந்தக் கல்வியை ஆன்மீகம் லௌகீகம் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. இந்த இரண்டு கல்வித் துறைகளையும் ஒரே குடையின் கீழ் கொணர்ந்து பொதுவான கல்விக் கூடமாக விளங்கும் ஓர் உன்னத கலாப்பீடமாகவே ஜாமியா

விரிவுரையாளர்களாக வெளிநாட்டவர்களும் அப்போதிருந்தே பணியாற்றி வந்தனர். உள்நாட்டைச் சேர்ந்த மர்ஹூம் மௌலவி மீரான், மர்ஹூம் கலீபதுஷ் ஷாதுலி, மௌலவி எம்.எச். சா/ஹல் ஹமீத் (பஹ்ஜி) உள்ளிட்ட பலர் முழு நேர போதனைப் பணிகளில் கடமையாற்றி வந்தனர்.

சுமார் 50 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு நாளடைவில் மாணவர், மற்றும் போதனாசிரியர் தொகைகளிலும் விரிவாக்கம் நிகழ்ந்து கொண்டே வருவதும் இதன் வளர்ச்சிக்கு சான்றாகவுள்ளது. கலாபீடத்தை பல்வேறு வழிகளிலும் கட்டியெழுப்புவதில் பல தசாப்த காலமாக கலாபீட பணிப்பாளர் மர்ஹூம் எம்.ஏ.எம் சுக்ரி ஆற்றிய பணிகளையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் ஞாபகமூட்டவேண்டும்.

இக்கலா பீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்ஹ் ஏ.ஸ ீ.அகார் முஹம்மத் இதன் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷெய்ஹ் எஸ்.எச்.எம்.பளீல், மற்றும் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் மர்ஹூம் அஷ்ஷெய்ஹ் ஹைருல் பஷர் உள்ளிட்ட பலர் இதன் ஆரம்ப கால மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கலாபீடம் குறித்து அஷ்ஷெய்ஹ் எஸ்.எச்.எம். பளீல் குறிப்பிடுகையில்,

நளீமிய்யாவின் கல்விசார் இலக்குகள் கல்வித் திட்டம், பாடப்பரப்பு என்பன சிறந்த கல்விப் புலமும் அறிவார்ந்த அணுகு முறையும், பரந்த நோக்கும் ஆன்மீகப் பணபாட்டுப் பயிற்சியும் கொண்ட அறிஞர் பரம்பரையொன்றை உருவாக்கும் நோக்கைக் கொண்டவையாகும். நளீமியாவில் கற்றவர்கள் அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழியறிவைக் கொண்டிருப்பதுடன் பாரம்பரிய இஸ்லாமிய கலாஞானங்களோடு நவீன சிந்தனைப் போக்குகளையும் இந்நாட்டின் பொதுக் கலைத் திட்டத்தையும் கற்கிறார்கள்.



நளீமிய்யாவின் இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம் இது வரையில் அதன் ஆய்வு சஞ்சிகையான “இஸ்லாமிய சிந்தனை“ யின் 156 இதழ்களை வெளியிட்டுள்ளது. அத்துடன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளது.

நாட்டிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் மீள் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட 7 பல்கலைக் கழகங்களில் ஜாமிஆவும் ஒன்றாகும். அந்தவகையில் , தேசிய ஐக்கியத்துக்கும் மீள் நல்லிணக்கத்துக்குமான முன்மாதிரியான பீடம் ஒன்று 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

எமது உள்நாட்டிலும் கூட வெளிநாட்டு தூதரகங்கள் அமைச்சு மட்டங்களிலும், அரச உயர் நிறுவனங்கள், திணைக்களங்கள், போன்றவற்றிலும் பணிப்பாளர் உள்ளிட்ட உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பவர்களும் நளீமிகளே.

இன்னும் பல நூற்றாண்டுகள் தலை நிமிர்ந்து பணியாற்ற வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் என்றும் போல் அருள்பாலிக்க வேண்டும். துணைநிற்க வேண்டும் என்று முழு நாட்டு முஸ்லிம்களும் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் முஸ்லிம் சமூகத்தின் முதுகெலும்பாக இன்று திகழ்வது ஜாமிஆ நளீமிய்யா தான்.






**நாச்சியாதீவு பர்வீன்**

# அப்துல் ரஸாக் எனும் இரசனை மொழியும்

## கலைஞன்- வாசகனின் வாக்கு மூலம்

**மருதமுனை குர்சித்**

பல்கலைக் கழகத்தில் நுழையும் பிரதான பாதைக்கு அருகில் அதன் விலாப் பகுதியை அண்மித்து,செம்மை இறைந்தும் கூனல் விழுந்தும் நிமிர்ந்தும் பின் நேர் கோடாகியும் ஓடியது அக் கிரவல் ஒற்றையடிப் பாதை. அதன் தொடக்கத்தில் இருந்தது அந்தக் கடை. “கடை“ என்று ஒரு வசதிக்காக சொல்லி வைத்தாலும் “குவாசியக்கோர்“ நோய் பீடித்தவின் லட்சணத்தில் அது இருந்தது. தொல் பொருள் ஆய்வாளன் கண்ணில் அது தட்டுப்படவில்லை. பட்டிருக்குமாயின் மூளையைக் கசக்கி கொண்டு ஆராய்ச்சியில் இறங்கி அந்தக் கடைக்கும் டைனோசரின் பரம்பரைக்கும் ஒத்த வயது என்று நிரூபித்திருப்பான். கனரக வாகனத்தின் சக்கரத்தில் மிதிபட்ட ஆமையின் வடிவத்தில் கிடந்த அதன் மேற் கூரை காற்றில் பறக்காதிருப்பது பேரதிசய வகைகளில் மிகப் பிரதானமானதொன்றுதான். அது தேநீர் கடை. நம்புவதற்கு ஆதாரமாக ஒரு பொய்லர் “புஸ்..“சத்தத்தோடு. பழைய கண்ணாடிப் பெட்டியுள் நானூறு பழ ஈக்களும் நான்கு பனிஸ்களும். றொபின் கூட் காலத்து மரத் தளபாடங்கள் இரண்டு.கவனித்து உட்காரவிட்டால் பிருஷ்டத்தின் தொலி அதன் இடுவலுள் கசங்கிச் சீரழிவது நூறு வீத உத்தரவாதம்.தவிரவும் பிரத்தியேக ஏற்பாடாய் புழுதி படிந்து மங்கலாய் தெரியும் பொலித்தின் பைக்கற்களில் மிக்ஸர் வகையறாக்கள். “மேட் இன் அக்கரைப்பற்று“. கடையினை அறுபதற்கும் எழுபதற்கும் இடைப்பட்டிருக்கும் “பருவத்து“ மாமா இயக்கிக் கொண்டிருந்தார். மாமாவுக்கு கடைவாயுள் நீர் சுரக்கும் நாங்கள் கண்டு கொண்ட தில்லை. மாமாவின் சிரிப்பும் உபசரிப்பும் எங்களை கட்டிப் போடும். மாமா பழமைவாதிதான். ஆனால் தொழில் யுக்தியில் நவின சிந்தனைச் சிற்பி. அவர் யுனிவர்ஸிற்றி மாணவரின் நாடித் துடிப்பை நுணுகி அறிந்து வைத்திருக்கும் அளவுக்கான பலே கில்லாடி. வார்த்யைாலேயே “பிளேன்ரி“யை “பெப்சி“யாக்கும் வல்லமை அவருள் இருந்தது. அவருடைய காய்ந்த பனிஸ்களை ஜளுழு பண்டமாக உயர்த்தி, வியாபாரம் செய்ய அவர் கற்று தேறியிருந்தார். மாமா தனது “கடை“ என்ற வஸ்த்துவை மூன்று பகுதிகளாக பிரித்திருந்தார்.பின் பகுதியில் யுனிவர்ஸிற்றி இளசுகள் காதல் மொழியில் குசு குசுக்க சின்ன அறை. அதற்கு மேலே அங்க சேஷ்டைகளுக்கு சென்றுவிடாமலிருக்கும் படியாக, சலாகைகளால் மட்டுமான மறைப்பு.முன் வராந்தாவில் கடையோடு தொடுப்புற்ற மாதிரியாய் பூசாத குட்டி அரைச் சுவர் மூன்று பேர் உட்காரும் இடத்தில் பாலைவனச் சோலை நண்பர்களாய் நான்கு பேர் உட்கார்ந்து கொள்வோம் அதிலும் மூன்று காகங்களும் ஒரு குயிலுமாய்.

மாமாவின் கடையில் நாங்கள் கருவாடாய் காய்வதற்கு பிரதான காரணம் அவர் தரும் “நன்னாரி“ ரசம் சொட்டும் தேநீர்தான். கேட்டவுடன் ஆறிக் கிடக்கும் பொயிலரில் தண்ணீர் ஊற்றி தீப் பெட்டியை தேடத் தொடங்குவார் மாமா. இரண்டே நிமிடம் “மெகி“ நூடுல்ஸ் கொதிக்கும் இடைவெளிக்குள் தேநீர் தயார்.கசப்பும் இனிப்பும் கலந்த அந்த “அமுத பானம்“ வெயிலின் கொடுமையை விட பரவாயில்லை ரகம் என்பதால் பொறுத்துக் கொண்டு அருந்துவோம் அதிலும் “கீச்சு.. கீச்சு“ குருவிகள் வேறு. மானமுள்ள ஆண் சிங்கங்கள் தோற்கமாட்டோம். தெனாவட்டாய் உறிஞ்சுவோம். பகலின் பரிதாபங்கள் அக்காலை, இப்படித்தான் தொலையும்.

அப்படியான ஒரு நாள், முன் மதியம். மாமாவின் நன்னாரி தேநீர் தொண்டைக்குள் இறங்கத் தொடங்கிய அந்த அகாலப் பொழுதில் காற்றூதிய பலூனாய் அப் பேருந்து அனாவசியத்துக்கு புழுதியை தூக்கி வாரி வீசி நின்றது.

அதிலிருந்து இரண்டு அரம்பையரும் மத்தியில் அந்த ஒட்டக் கூத்தனும் இறங்கினார்கள்.அவன் ஒட்டக் கூத்தன் கிடையாது.ஒட்டகக் கூத்தன். ஆறடியை தொடும் தூரத்துக்கு வளர்ந்திருந்வனை ஒட்டகக் கூத்தன் என்று சொல்லாமல் வேறெப்படித்தான் சொல்வது. அவன் “பெஸ்ற் இயர்காரன்“ என்பதை ஒரு இஞ்ச் முள்ளாணி சைஸில் சிலும்பி நின்ற அவன் முடி சொன்னது. நன்கு முற்றிய நாவற் பழத்தை உப்பு நீரில் ஊற வைத்தது போன்றதொரு பொழு பொழுப்பு அவன் முகத்தில். “சூப்பர்சீனியர்“ நிற்கிறான் என்ற மட்டு மரியாதையில்லாமல் என்னமாய்த்தான் சல்லாபித்து கடக்கிறான். வேப்ப மரத்தின் கீழ் இடுப்பில் கையூன்றி பிளேன்றி ரசத்தில் கிறங்கி கிடந்த என்னை அவன் ஒரு பொருட்டாக கருதியதாய் தெரியவில்லை.“பகிடைவதை நேரடி சீனியருருக்கான தர்மம்“ என்பதால் பல்லை “நற.. நற“ என கடிப்பதை தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை ”போடா புழு விழாத பயற்றங்காயே..பிறகு உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்.”மனத்துள் கருவிக் கொண்டேன். அவன் போய்க் கொண்டேயிருந்தான். திரும்பினேன் மாமா என் கையில் இருந்த அந்த அட்டைக்கரி டம்ளரை பிடுங்கிக் கொள்ள காதலியை கானகத்தில் விட்டவன் போல் தவித்துக் கொண்டிருந்தார்.

காலத்துக்கு ஜவ்வு மிட்டாயின் இயல்பு. எத்தனை வேகமாய்த்தான் இழுபட்டு நீண்டிருக்கிறது. அதன் நீட்சியில் அவன் பெயர் அப்துல் றஸாக் என்றும் அவன் நிரம்பவவே தமிழையும் அதனை வஸ ியப்படுத்தும் வித்தையும் தெரிந்தவன் என்பதையும் அறிந்து கொண்டேன் என்னைப் போலவே அவனும் “தமிழ்க் காதலன்“ என்ற சங்கதி அவன் மேல் பிரியத்தையும் ஒட்டுதலையும் கூட்டிற்று. இனி அவனை அவன் என்று சொல்லக் கூடாது என்று உறுதி பூணும் அளவுக்கு அவனோடு பொருந்திப் போனேன்.

இதோ எதிரில் அப்துல் றஸாக் இரண்டு மேசை தள்ளி..., இராணுவத்திலிருந்து தப்பி ஒடியவன் போல பதுங்கி பதுங்கி திரிந்த அவர் இப்போது தைரியம் பிறந்து கென்ரின் ஆகாரத்தை முழுங்கிக் கொண்டிருக்கிறார். உடன் பாலை நிலத்தில் அலையும் “பர்மா“காரனின் சாயலில் நவாஸ் சௌபி என்கிற வாலிபனும் அரிந்த பலகை சேப்பில் ஒரு பெட்டையும். சாப்பிட்டு முடிந்ததும் அப்துல் றஸாக் அருகில் வந்தார். அவர் “துயரி“ எனும் பெயரில் சஞ்சிகை வெளியிடப் போவதாகவும் அதற்கு கவிதை வேண்டுமென்றும் என்னிடம் கேட்டார். அதற்கு முந்தைய காலங்களில் தமிழ் சங்கம் நடத்தும் புதன் கிழமை நிகழ்வுகளில் நான் ஒன்றிரண்டு கவிதைகள் “பறை“ந்ததை அவர் கேட்டிருந்ததால்தான் என்னிடம் கவிதை கோரும் விசப் பரிட்சையில் அவர் இறங்கியிருக்கக் கூடும். மூன்று கிழமைகள் ஏமாற்றி பின் நான்காம் வாரம் சோம்பல் உதறி அப்போது நான் ஊறிக் கிடந்த பெண்ணிய வாசிப்பின் அதிர்ப்பில் ஒரு கவிதை கொடுத்தேன். துயரி வந்திருந்தது வீரியத்தோடு. அது அவர் வயதைக் கடந்த பெரிய உழைப்பு. அவர் அகலிப்பான உலகம் ஒன்றில் சஞ்சரிக்கிறார் என்பதற்கு அதுவே முதற் சான்று.

அடுத்த வாரம் தொடரும்...

# தந்தையாயிருத்தல்

அவருக்கும் எனக்குமான
உறவுச் சுவரில்
வேர் பரப்பியிருந்தது
விரிசல்

ஒரு முறையேனும்
முறை சொல்லி
அழைத்ததாய் நினைவில்லை
கடந்த காலங்களில்

மீசை அரும்பாதவரை
கக்கத்தில் முகம்
புதைத்துக் கிடந்ததைச்
சொல்கிறாள் அம்மா

எனது
வெற்றிகளுக்காக
தோல்விகளைத் தோளில்
சுமந்தவனென்கிறாள்
பாட்டி



என்
மதிப்பெண்களை
கல்லூரிகளுக்கு
காவித் திரிந்ததில்
அவரின்
கால் செருப்பு அறுந்த
கதை சொல்கிறாள் தங்கை

சேக்காளிகளோடு
சண்டைபிடித்து
மண்டையுடைந்து வந்தபோது
மருந்திட்டதை
ஞாபகப்படுத்துகிறான்
தம்பி

புறக்கணிப்பின்
எல்லாக் கணங்களிலும்
அவர் தந்தையாய் இருந்தார்

நான்தான்
கயிற்றை அறுக்கும்
கன்றுக்குட்டியாய்..

– மன்னார் அமுதன் –

# சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை புஹாரி தமாம் மஜ்லிஸ்

(பேருவளை, பீ.எம்.முக்தார்)

சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் 145 வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் இன்று 11.02.2024 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அல் ஆலிமுல் பாழில் வஷ் ஷெய்கு காமில் சங்கைக்குறிய அஷ்செய்கு அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தலைமையில் நடைபெறும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தங்களது வரலாற்றுப் புகழ்மிக்க இறுதி ஹஜ்ஜின் (ஹஜ்ஜதுல் விதாவின்) போது அங்கே குழுமிருந்த அருமைத் தோழர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதைச் சொன்னார். “உங்களுக்காக நான் இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் ஒரு பாதும் வழி தவற மாட்டீர்கள். இறைவேதமாம் புனித அல்குர்ஆனும் அண்ணலாரது நடை முறைகளாகிய சுன்னாவுமே அவை இரண்டுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஹதீஸ் விளக்கங்களைத் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மை உணரப்படவில்லை. நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்த காரணத்தினால் அன்று மக்கள் மத்தியில் எழுந்த பிரச்சினைகளுக்கு அவரே விளக்கமளித்துக் கொண்டிருந்தார். ஆனால் நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப்பின்னர் ஹதீஸ்களின் முக்கியத்துவம் உணரப்பட்டன. புனித அல்குர்ஆனை தெளிவாக விளங்கிக் கொள்ளவும், இஸ்லாமிய திட்டங்களை நன்கு அறிந்து கொள்ளவும் ஹதீஸ்கள் தேவைப்பட்டன. இதனால் காலக் கிரமத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழித் தொகுப்புக்கள் வெளிவர ஏதுவாயின. இவற்றுள் தலையாயதும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது “புனித ஸஹீஹுல் புகாரி” எனும் ஹதீஸ் பேழையாகும்.

அபூ அப்தில்லாஹ் முஹம்மதிப்னு இஸ்மாயீல் புஹாரி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மேற்படி நூல் அல்குர்ஆனுக்கு அடுத்த அடுத்தபடியாக சிரமேற்கொண்டு கருதப்பட்டு போற்றப்படுகிறது. இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களின் வாய்வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275



ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தமது ஸஹீஹுல் புகாரி கிரந்தத்தில் எழுதியுள்ளார். மேற்படி புகாரிக் கிரந்தம் பராயணம் செய்யப்பட்டு விளங்கப்படுத்தும் மஜ்லிஸ்கள் உலகின் நாலா பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது. எமது நாட்டிலும் பல இடங்களில் இந்த புனித கிரந்தம் வாசிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அடங்கிய புனித புகாரி கிரந்தத்தை வாசித்து நபிகளாரின் உயரிய வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்கும் அதன்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும் புனித புஹாரி கிரந்தம் எமக்கு பேருதவி புரிகின்றன.

இந்த அடிப்படையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாச்சேனையில் அமைந்துள்ள பைதுல் முபாரக் முஸ்தபவீயா புஹாரித் தக்கியாவில் இற்றைக்கு 144 வருடங்களுக்கு முன்னர் (ஹிஜ்ரத் ஆண்டு 1301 ஜமாதுல் ஆகிர் மாதம் பிறை 27ல்) ஆரம்பம் செய்யப்பட்ட புகாரி மஜ்லிஸ் அல்லாஹ்வின் கிருபையால் ஒரு நூற்றாண்டை தாண்டிச் சென்றாலும், அன்று முதல் இன்று வரை மாற்றங்கள், நூதனங்கள் எதுவுமின்றி அதன் சரத்துக்களைப் பேணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வருடாந்தம் மூன்று பிறைகள் அடங்கிய ஜமாதுல் ஆகிர் மாதம் தொடங்கி ரஜப் மாதம் முழுமையாக நடைபெற்று சஹ்பான் மாதம் முதல் பகுதியில் முடிவடைவது விஷேட அம்சமாகும்.

18ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மாளிகாச்சேனை புகாரித் தக்கியா இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம்மிக்கதோர் தைக்கியாவாக உள்ளது. அதன் ஆரம்ப அமைப்பிலே தக்கியா இருக்கின்ற போதிலும் தற்போது இடவசதி கருதி விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. அன்று வைத்த சட்டதிட்டங்கள் இன்றும் எவ்விதமான மாற்றமும் இன்றி அப்படியே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஹிஜ்ரி 1301 ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறை 27ல் அதிகாலை சுபஹ் தொழுகையை முடித்த அதே இருப்பில் பைத்துல் முபாரக் முஸ்தபவீயா புகாரித் தக்கியாவில் நபிகள் நாகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் கனவு உத்தரவுப்படி தென் அரேபிய எமன் நாட்டைச் சேர்ந்த சங்கைக்குறிய நாயகம் சேகு அப்துர் ரஹ்மான் இப்னு ஹஸன் இப்னு அப்துல் பாரி அஹ்தலி மௌலானா என்ற பெரியார் புனித ஸஹீஹுல் புஹாரி கிரந்தத்தை தனது கையில் எடுத்து ஆரம்பப் பகுதியை பராயணம் செய்தார். தனது வலப்பத்தில் அமர்திருந்த அரபுத் தமிழ்யுக தந்தை எனப் போற்றப்படும் மகாண் சங்கைக்குறிய சேகு முஸ்தபா வலியுல்லாஹ்விடம் புனித புஹாரி கிரந்தத்தைக் கையளித்து இதனை ஒவ்வொரு வருடமும் (வெள்ளிக்கிழமை தவிர) 30 நாட்கள் பராயணம் செய்து வரும்படி பணித்தார்.

மாகாண் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள்

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு புனித பேருவளை நகரிலிருந்து தான் ஆரம்பமானது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோமாட்டார்கள். இந்த பேருவளை நகரில் மூத்த குடியில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குறிய மாகாண் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பிறந்தார்கள். இந்த நாட்டின் சமய வரலாற்றில் அன்னார் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை பிடித்துக்கொண்டார். அன்னார் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹு சட்டதிட்டங்கள் போன்ற இஸ்லாமிய மத அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் இத்துறையில அறிவு பெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாசேனை

பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாகவும், ஆய்வுகூடமாகவும் அமைத்து இஸ்லாமிய பணிபுரியும் காலத்தில் சங்கைக்குறிய முபாரக் மௌலானா என்ற பெரியாரின் சகவாசம் கிடைத்தது.

சங்கைக்குறிய செய்கு முஸ்தபா (றஹ்) அவர்களின் சேவைக்கு இவர்கள் துணை புரிந்து சிறிது காலத்தில் முபாரக் மௌலானா தென்னிலங்கையில் காலி நகரில் இறையடி சேரவே தென் அரேபியர் யெமன் நாட்டைச் சேர்ந்த அஹ்தலி மௌலானா அவர்களின் சகவாசம் கிடைத்து பேருவளை மாளிகாச்சேனை புஹாரித் தக்கியாவில் புஹாரி மஜ்லிஸ் ஆரம்பம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. சேகு முஸ்தபா (றஹ்) அவர்களினால்

அறிமுகப்படுத்திய காதிரியதுன் நபவிய்யா முஸ்தபவீயா எனும் ஆத்ம ஞானவழி (தரீக்கா) இன்றும் இலங்கையின் சுமார் இருபது ஊர்களில் பின்பற்றப்பட்டு வருவது சுன்னத் ஜமாத் கொள்கைகளுக்கு உயிரூட்டக்கூடிய விடயமாகும்.

சேகு முஸ்தபா அவர்கள் மெய்ஞானியாகவும் புலவராகவும் திகழ்ந்தார். அன்னவரினால் இயற்றப்பட்ட மீசான் மாலை அரபுத்தமிழ் கவிதை புகழ் பெற்றதாகவுள்ளது. அவர் பல இஸ்லாமிய பத்வா நூல்கள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முனாஜாத்துக்கள் போன்றவற்றை அரபியிலும், அரபுத்தமிழிலும் வெளியிட்டார்கள். அஹ்காமுல் இகம் என்ற பெயரில் அரபுத் தமிழ் அச்சுக்கூடத்தை நிறுவி அதன் மூலம் அபுத் தமிழில் பல ஆக்கங்களை வெளியிட்டார். இறுதியில் ஹஜ் கடமைக்காக புனித மக்கா சென்ற போது மக்காவில் வபாத்தாகி கதீஜா நாயகி பாட்டியாரின் சமாதிக்கு மேல் பக்கமாக நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அரபியல்லாத ஒருவரை அந்த இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது முதல் தடவையாகும். மக்கா மதீனா போன்ற முஸ்லிம் நாடுகளில் சேகு முஸ்தபா (றஹ்) அவர்களின் சன்மார்க்க அறிவுத் திறன் பலராலும் புகழப்பட்டது.

புனித புகாரி மஜ்லிஸை ஹிஜ்ரி 1301 முதல் 1304 வரை சங்கைக்குரிய சேகு நாயகம் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் நடாத்தினார். பின்னர் அவர் மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் முஹம்மத் ஹாஜியார் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1304 முதல் 1331 வரை நடாத்தினார். அவருக்குப் பின்னர் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் அப்துல் சமீம் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1331 முதல் 1391 வரை தலைமை தாங்கி நடாத்தினார். அதனைத் தொடர்ந்து அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு முஹம்மத் நூர் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1391 முதல் 1411 வரை நடாத்தினார். அன்னார் இறையடி சேர்ந்த பின்னார் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு அஹமது ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1412 முதல் இன்று வரை மிகச் சிறப்பாக தலைமை தாங்கி நடாத்தி வருகிறார். சங்கைக்குரிய சேகு முஸ்தபா நாயகத்தின் குடும்பத்தைச் சேர்ந்த பரம்பரையினர் புனித புகாரி மஜ்லிஸை புஹாரித் தக்கியாவில் சிறப்பாக நடாத்தி வருவது அல்லாஹ்வின் கிருபையும், நபி (ஸல்) அவர்களின் திருப்பொருத்தமும் என்றே கூற வேண்டும். புனித மஜ்லிஸ் எதிர்காலத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

நாட்டின் நாளா பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இஸ்லாமிய சகோதரர்கள் இப்புனித மஜ்லிஸில் கலந்து கொள்வர்.

மேற்படி புஹாரிக் கந்துஸரியை முன்னிட்டு இலங்கை ரயில்வே திணைக்களம் 145வது வருடமாகவும் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி சனிக்கிழமையும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு - அளுத்கமை, காலி - பேருவளை இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தவுள்ளது. இந்த இரு தினங்களிலும் கரையோர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல கடுகதி ரயில்வண்டிகளும் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும்.

## மனநலமும் ஆலோசனையும் 18

# மகிழ்ச்சியான மனைவி மகிழ்ச்சியான வாழ்க்கை

திருமணம் என்பது ஒரு ஆன்மாவிற்கும் மற்றொரு ஆன்மாவிற்கும் இடையே அருள் இறைவனால் இணைக்கப்பட்ட ஆழமான பிணைப்பாகும். இந்த பிணைப்பால் அவர்கள் அமைதியை, மகிழ்ச்சியை ஸ்திரத்தன்மையை அவ்வாறே அனுமதிக்கப்பட்ட இன்பங்களை அனுபவிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

அழகான அன்பும் கருணை நிறைந்த உறவும் திருமண வாழ்வில் நிரம்பி இருக்கும் போது அவர்கள் வாழும் இடத்தை அமைதியின் உறைவிடமாக மாற்றி அமைக்கலாம். மகிழ்ச்சி தரும் மடமாக ஆக்கலாம். அந்த இடம்தான் தன் கணவனுக்கு அடைக்கலமாக இருக்கும். அவனது ஓய்வுக்கான ஆதாரமான இடமாக இருக்கும். இந்த உயர்ந்த அர்த்தத்தைப் புரிந்துகொண்டு திருமண பிணைப்பை ஒரு இனிமையான, உண்மையான மனமகிழ்ச்சியை உணரும் பிணைப்பாக ஆக்க வேண்டிய கடமை மனைவிக்கு இருக்கிறது. அதற்கு வழிகாட்டி உதவி ஒத்துழைப்பு வழங்கும் பொறுப்பு கணவனுக்கு இருக்கிறது. இந்த இரண்டும் இணைந்து கொள்ளும் போது மட்டுமே மகிழ்ச்சி மலர ஆரம்பிக்கிறது.

“நீங்கள் அவர்களுடன் ஆறுதலாக வாழ்வதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக துணையை உருவாக்கினான், மேலும் உங்கள் (இதயங்களுக்கு) இடையே அன்பையும் கருணையையும் ஏற்படுத்தினான்” (அல்குர்ஆன் 30:21). என்று ஆறுதல் ஆரம்பிக்கும் இடத்தை இறைவன் எடுத்துக் காட்டுகிறான்.

ஆறுதலை அனுபவிக்கவும் அன்பையும் கருணையையும் அதிகரிக்கவும் ஒருவருக்கு ஒருவர் தொடர்ந்து உதவியாக இருக்க வேண்டியது கட்டாயம் என்பதை இதிலிருந்து அறியலாம்.

“மகிழ்ச்சியான மனைவி மகிழ்ச்சியான வாழ்க்கை” என்ற ஒரு முதுமொழியை கேட்டிருப்போம். ஒருவன் கணவனாக தன் வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க விரும்பினால், அவன் தன் மனைவியை மகிழ்ச்சியாக வைத்திருக்க அவன் செய்ய வேண்டிய முக்கிய வேலைகளை செய்தாக வேண்டும் என்பதுவே இதன் பொருளாகும்.

நல்ல வாழ்க்கை அமைய, நல்ல மனைவி வேண்டும் என்பது உண்மைதான்..

ஆனால் நல்ல மனைவி சட்டென்று உருவாகுவதில்லை. மகிழ்ச்சியான சூழ்நிலையில் அவள் வாழும் போதும் மகிழ்ச்சியாக வாழ வாய்ப்புகள் வழங்கும் போதும் அவள் மகிழ்ச்சியை உணர்கிறாள். அவளிடம் மகிழ்ச்சி இருக்கும் போது தன் கணவன் திருப்தியாக இருக்கவும் அவன் மகிழ்ச்சியை உணரவும் அவளால் உதவ முடியும்.

ஒரு மனைவி தனது திருமண வாழ்வில் மகிழ்ச்சியாக இருந்தால், கணவனும் மகிழ்ச்சியாக இருப்பான், அதன் விளைவாக மகிழ்ச்சியான வாழ்க்கையை இருவரும் அனுபவிப்பார்கள்.

1. மனைவி செய்யும் உழைப்பை கணவன் அங்கீகரிப்பதை அவள் உணரும் போது அவளிடம் மகிழ்ச்சி உருவாகும்.

2. அன்பான வார்த்தைகளையும் இனிமையான சைகைகளையும் வெளிப்படுத்தும் போது அவளில் மகிழ்ச்சி வெளியாகும்.

3. அவளது அன்றாட வேலைகளில் அவளுக்கு உதவி, ஆதரவு காட்டினால் அவளிடம் மகிழ்ச்சி மலர ஆரம்பிக்கும்.

4. அவளுடைய உணர்ச்சித் தேவைகளைக் உண்மையாக செவிமடுத்தால் அவளுக்குள் மகிழ்ச்சி துள்ளி ஓடும்.

5. அவளுக்கு அண்மையில் இருந்தாலும் தூரத்தில் இருந்தாலும் அவளுடன் நேரத்தை தரமாக செலவிடும் போது அவளிடம் மகிழ்ச்சி பூவாக பூக்கும்.

6. அவளது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நல்லவராக இருந்தால் அவள் இதழ்களில் மகிழ்ச்சி ஊற்றாக ஊறும்

7. அவளுக்கு சிறந்த தோழனாக இருந்தால் மகிழ்ச்சி அவளில் மணந்து கொண்டே இருக்கும்.

மனைவியிடம் மகிழ்ச்சி உருவாக இவையெல்லாம் காரணமாகலாம்.

அருள் இறைவன் கதீஜா அம்மையாருக்கு சுவனத்தில் ஒரு சிறப்பு இடத்தை வாக்களிக்கிறான், ஏனென்றால் அவர் தன் வீட்டில் அமைதியான, அன்பான சூழலை உருவாக்கினார் என்பதற்காக. நபி அவர்கள் தன் மனைவி கதீஜா பற்றி இவ்வாறு விவரித்தார்கள். ‘மக்கள் என்னை நம்ப மறுத்தபோது அவள் என்னை நம்பினாள், மற்றவர்கள் என்னைப் பொய்யன் என்று சொன்னபோது அவள் என்னை உண்மையாகக் கருதினாள், மற்றவர்கள் எனக்காக செலவு செய்ய மறுத்தபோது அவள் எனக்காக செலவு செய்தாள். தன் மனைவி பற்றி எவ்வளவு அழகாக விவரிக்கிறார்கள். அது அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியை கொடுத்திருக்கும்.

ஒவ்வொரு கணவனும் தன் மனைவி தனக்கு மிகவும் பிரியமானவள் என்பதை உண்மையாக உணரவும் வேண்டும். நம்பவும் வேண்டும். அவ்வாறே தன் கணவன் தனது மிகப்பெரிய ரசிகன் என்பதையும், கணவன் பார்வையில் அவள் அற்புதமான, அழகான நபர் என்பதையும் மனைவி அறிய விரும்புகிறாள். அந்த நம்பிக்கையை அவளுக்கு கொடுத்தால் அவள் மகிழ்ச்சிக்கு சொந்தக்காரியாக ஆகிவிடுவாள்.

கணவனுக்கு மகிழ்ச்சியை வழங்கும் பிரதான நபராக மனைவி இருக்கிறாள் என்பதை கணவன் போன்று மனைவியும் உணர வேண்டும்.

“இந்த உலகம் தற்காலிக வசதிகளைத் தவிர வேறில்லை, இந்த உலகில் மிகப்பெரிய மகிழ்ச்சி ஒரு நேர்மையான, பக்தியான பெண்”.

திருமண வாழ்க்கை என்பது இந்த உலக வாழ்க்கையில் அமைதியை அல்லது மகிழ்ச்சியை பற்றியது மட்டுமல்ல. இறைவன் விதித்த கட்டளைகளை பின்பற்றுவதிலும் தடுத்தவற்றை செய்யாமல் இருப்பதிலும் தங்கியிருக்கிறது என்பதையும் நாம் புரிய வேண்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# 37 வருடங்கள் கிராம சேவையாளராக பணியாற்றி ஓய்வு பெற்றார் ஜினூஸ்

(பரீட் இக்பால்)



யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த சுல்தான் – காமிலா தம்பதியினரின் மகனாக 27 – 12-1963 இல் ஜினூஸ் பிறந்தார். ஜினூஸ் ஆரம்பக் கல்வியை யாழ் மஸ்ற உத்தீன் பாடசாலையிலும் தொடர்ந்து யாழ் ஒஸ்மானியா கல்லூரியிலும் யாழ் மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார்.

இவரின் தந்தை சுல்தான் யாழ் சின்னப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையில் 1990 வரை நீண்ட காலமாக தலைவராகவும் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

ஜினூஸ் கணித ஆசிரியர் நேர்முக பரீட்சையில் சித்தியடைந்த நிலையில் தனது சகோதரர் விஷேட சேவை உத்தியோகத்தரான ஜவ்பர் திடீர் மரணம் காரணமாக, தகப்பனாரின் விருப்பத்திற்கிணங்க கிராம சேவையாளர் நியமனத்தை 01-01-1987 இல் பெற்றார்.

1990 இல் இடம்பெயர்ந்ததையடுத்து ஜினூஸ் நீர்கொழும்பில் குடியேறி 1991 ஏப்ரல் மாதம் முதல் தொடர்ந்து கிராம சேவையாளராக பணியாற்றினார்.

ஜினூஸ் 25-10-1995 இல் ஜஹாங்கீர் – துமைலா தம்பதியினரின் மகள் பாத்திமா பர்ஹானாவை (யாழ்ப்பாணம் மர்ஹூம் ஹவுது ஆசிரியரின் பேத்தி) திருமணம் செய்தார். ஜினூஸ் பர்ஹானா தம்பதியினருக்கு மூன்று முத்தான பிள்ளைகள். இரு ஆண் பிள்ளைகளும் (முஷாரப், ஜஸால்) ஒரு பெண் பிள்ளையும் (பாத்திமா சஹ்ரா) இரண்டு பேரப் பிள்ளைகளும் உண்டு.

ஜினூஸ் 2010 இல் வெளிநாட்டு பயிற்சிக்காக இருவார காலம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஜினூஸ் யாழ். சின்னப்பள்ளிவாசல் புனரமைப்பு குழுவை உருவாக்கி, அதனூடாக பள்ளிவாசலை புனரமைத்துடன் இன்று வரை சின்னப்பள்ளி வாசல் நம்பிக்கையாளராகவும் செயற்படுகிறார்.

ஜினூஸ் 37 வருடம் திறம்பட மக்களுடன் அன்பாக பழகி தேவை கருதி உடனுக்குடன் தேவைகளை நிறைவேற்றி வந்தார் என்றால் மிகையாகாது. ஜினூஸ் திறம்பட கிராம சேவையாளர் பதவியில் 37 வருடங்கள் பணியாற்றி 27-12-2023 இல் ஓய்வடைந்துள்ளார். அவரது கிராம சேவையாளர் பணியை மக்கள் நன்றியுடன் பாராட்டுகின்றனர்.



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அக்குறணை – தொடன்கொள்ள அல் இல்மா முன்பள்ளி சிறுவர்களின் சுதந்திர தின நிகழ்வு முன்பள்ளி வளாகத்தில் (05) இடம்பெற்றபோது (05.02.2024) எடுக்கப்பட்ட படங்கள்.

(ராபி சிஹாப்தீன்)




# கீழ்ப்படியாத குழந்தைகளுக்கு பாடம் கற்றுக்கொடுக்க பெற்றோருக்கு சில டிப்ஸ்

**பயாஸா பாஸில்**

குழந்தை வளர்ப்பு என்பது அவ்வளவு எளிதான விஷயம் இல்லை, ஒரு சவாலான பணி என்றே சொல்லலாம். குறிப்பாக பெற்றோர் சொல்லை கேட்காத கீழ்ப்படியாத குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்று கொடுப்பது அத்தகைய சவாலான விஷயம் தான். இதற்கு பொறுமையும், புத்திசாலித்தனமும் முக்கியம்.

மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பதன் மூலம் உங்கள் பிள்ளையில் இரக்கத்தையும் கருணையையும் ஊக்குவிக்கவும். இது சமூக ரீதியாக மிகவும் திறமையானவர்களாகவும், அவர்களின் செயல்களின் விளைவுகளைப் பற்றிய சிறந்த விழிப்புணர்வைப் பெறவும் உதவும்.

ஒவ்வொரு செயலும் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உங்கள் குழந்தைக்கு புரிய வையுங்கள். அவர்கள் செய்யும் செயல்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கு என்ன விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை கருத்தில் கொள்ள அவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள். மேலும் உங்கள் குழந்தையின் செயல்களுக்கு அவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை புரிய வையுங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்குச் சிக்கல்களைத் தீர்க்கும் நுட்பங்களை கற்றுக் கொடுங்கள். சமாளிக்கும் திறன் இல்லாதது அல்லது விரக்தியே கீழ்படியாத நடத்தைக்கு அடிப்படைக் காரணமாக இருக்கலாம் என்பதை உணர அவர்களுக்கு உதவுங்கள். பிரச்சனைகள் மற்றும் தடைகளைத் தீர்க்க மற்ற, மிகவும் ஆக்கபூர்வமான முறைகளைப் பற்றி சிந்திக்க கற்றுக்கொடுங்கள்.



# ஆரவாரமின்றிய எழுத்தாளுமை

பத்திரிகை வாசகர்களுக்கும் வானொலி நேயர்களுக்கும் பரிச்சயமான ஒரு பெயர்தான் ஸீனத் ரஹ்மா.

ஆனால், முகம் தெரியாத நபர் அவரது முகம் தெரிந்த வாசகர்கள் மற்றும் நேயர்கள் இல்லை என்றே கூறலாம். எந்த மேடையும் ஏறாமல் தனது இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள்ளே பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பராமரித்துக் கொண்டு தனது கணவரினதும் மகளினதும் தொழிலுக்கு முழுமையாக ஒத்தாசையாக இருந்து கொண்டு நூற்றுக்கணக்கான கவிதைகள் எழுதியவர்.

சிறுவர் பாடல்கள் , சிறுகதைகள் , உருவகங்கள் என ஏராளமான படைப்புகளை எவ்வித ஆரவாரமும் இன்றி இலக்கிய உலகுக்கு தந்தவர். இவரது செயற்றிறன் பிரமிக்க வைக்கிறது.



வானொலியில் ஒலிபரப்பாகிய இவரது ஆக்கங்கள் மிகப் பல.... குறிப்பாக ”ஊடுருவல் சமூக சித்திரம்” இவரது ஆக்கங்கள் மிக அதிகமாக இடம்பெற்ற நிகழ்ச்சி. வெறும் கற்பனை உலகில் சஞ்சரிக்காது தனது வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் பாத்திரங்களைக் கொண்டே படைப்பாக்கம் செய்துள்ளார். அதேவேளை.., ஓவியம் வரையும் திறனும் இயல்பாகவே வரப் பெற்றிருக்கும் இவர் 1950 களில் திஹாரியில் சமூக சேவையின் பிதாமகன் ஆக விளங்கிய ஐ.அப்துர் ரஹ்மான் ஆசிரியரின் மூத்த மகள் ஆவார்.

இயல்பாகவே சமூக பற்று இவரிடம் மிகுந்து காணப்பட்டது. பல ஆண்டுகள் பூகொட குமாரிமுல்ல அஹதியா பாடசாலை அதிபராகவும் முஸ்லிம் சங்க செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். திஹாரிய அப்துர் ரஹ்மான் , உம்மு ரஹ்மா தம்பதிகளின் மூத்த மகளான இவர் குமாரிமுல்ல எம். எம்.எம். ஸக்கரியாவை கரம் பிடித்து இல்லற வாழ்வில் பிரவேசித்து நான்கு குழந்தைகளுக்கு தாயானார்.

செந்தூரம், நவமணி, தினகரன், சுடர்ஒளி, ஜெஸ்மின் என பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியான அவரது நூற்றுக்கணக்கான ஆக்கங்களில் தேர்வு செய்யப்பட்ட சில படைப்புகள் அவரது முதலாவது நூலில் உள்ளடங்கப் பெற்றுள்ளது.

” எந்த காலம் ” எனும் தலைப்பில் சிறுவர்களுக்கான சிறுகதைகளையும் , ”புறப்படு மகனே” எனும் தலைப்பில் கவிதைகளையும் ஒரே பார்வையில் ஒரே நூலாக வெளியிட்டு எழுத்து இலக்கியத்தில் தடம் பதித்துள்ளார். 1952 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பிறந்த அண்ணார் தனது 61 ஆம் வயதில் 2013 ஆம் ஆண்டு மே மாதம் ஏழாம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

# 18ஆவது ஆசிய உதைப்பந்தாட்டத் தொடர்

## மீண்டும் சம்பியனான கத்தார், ஆசியாவின் உதைப்பந்தாட்ட வல்லரசாகினர்



அரபாத் பஹுர்தீன்

18ஆவது ஆகியக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் பலமிக்க ஜோர்தான் அணியை அக்ரம் ஆபீபின் ஹெட்றின் கோல்களின் உதவியுடன் 3:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய நடப்புச் சம்பியனான கத்தார் தொடரான 2ஆவது முறையும் சம்பியன் மகுடத்தை முத்தமிட்டு அசத்தியதுடன், ஆசியாவின் உதைப்பந்தாட்ட வல்லரசாக மாறியுள்ளது.

1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடமபெற்றுவரும் ஆசிய உதைப்பந்தாட்டத் தொடரின் 2023ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நடப்பு ஆண்டான 2024இல் இடம்பெறுகின்றது. அதன் 17ஆவது அத்தியாயம் கடந்த 2019ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றருக்க அதில் கத்தார் அணி முதல் முறையாக சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டிருந்தது. இந்நிலையில் ஆசிய உதைப்பந்தாட்டத் தொடரின் 18ஆவது அத்தியாயம் கடந்த ஜனவரி 10ஆம் திகதி ஆரம்பித்து நேற்றைய தினமான பெப்ரவரி 10ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. இப் போட்டித் தொடர் கத்தார் நாட்டில் இடம்பெற்றிருந்தது. குறிப்பாக உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் இடம்பெற்ற மைதானங்களில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முதல் சுற்று லீக் ஆட்டங்கள்.

18ஆவது ஆசியக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் அத்தியாயத்தில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்றிருந்தன. இவ் 24 அணிகளைத் தேர்வு செய்ய மொத்தமாக 47 நாடுகளின் அணிகள் தகுதிகான் போட்டியில் பங்கேற்றிருந்தன. இதில் இலங்கை அணி பங்கேற்றிருந்ததுடன் அவ்வணியால் ஆசியக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மேலும் கத்தார் அணி போட்டிகளை நடாத்துவதால் நேரடித் தகுதியை பெற்றிருக்க மிகுதி 23 அணிகளுடன் சேர்த்து மொத்தம் 24 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 6 குழுக்கலாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டங்கள் இடம்பெற்றன. இதில் போட்டிகளை நடாத்தும் கத்தார் அணி குழு ஏ இல் சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று முதல் இடத்தையும் தஜகிஸ்தான் அணி ஒரு வெற்றி, ஒரு சமநிலையுடன் 2ஆம் இடத்தையும் பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இதே போன்று குழு பி இல் இருந்து அவுஸ்திரேலியா, உஸ்பெகிஸ்தான் மற்றம் சிரியா ஆகிய 3 அணிகள் சுப்பர் 16 சுற்றுக்குத் தகுதியைப் பெற்றன. குழு சீ இல் ஈரான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பலஸ்தீனம் ஆகிய அணிகளும் , குழு டீ இல் ஈராக், ஜப்பான் மற்றும் இந்தோனேசியா நாடுகளும் குழு ஈ இல் பஹறைன். தேன் கொரியா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளும் 2ஆம் சுற்றை உறுதி செய்ய குழு எப் இல் இருந்து சவுதி அரேபியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் சுப்பர் 16 சுற்றில் கால்பதித்தன.

### சுப்பர் 16 சுற்றில் கலக்கிய முன்னாள் சம்பியன்கள்

முதல் சுற்று முடிவில் குழுநிலையில் அதிகப் புள்ளிகளைப் பெற்றிருந்த 16 அணிகள் இச் சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தன. இச் சுற்று விலகல் முறைச் சுற்றாக அமைந்திருந்தது. இதன் முதல் போட்டியில் முன்னால் சம்பியனான அவுஸ்திரேலிய அணி, இந்தோனேசிய அணியை 4:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி காலிறுதியை உறுதிப்படுத்தியது. மற்றுமொரு சுப்பர் 16 போட்டியில் நடப்புச் சம்பியனும் போட்டிகளை நடாத்தும் நாடுமான கத்தார் பலஸ்தீன் அணிக்கு எதிரான போட்டியில் மிகுந்த போராட்டத்தின் பின் 2:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வென்று மீண்டும் காலிறுதிக்குள் கால் பதித்தது.

இச் சுற்றில் இடம்பெற்ற இன்னுமொரு போட்டியில் ஜோர்தான் அணி ஈராக் அணியை 3:2 என வீழ்த்தியதுடன் ஆசிய கிண்ணத்தை 4 முறை கைப்பற்றிய ஜப்பான் அணி பஹ்றைன் அணியை 3:1 என இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. ஏனைய போட்டிகளில் தஜிகிஸ்தான் , உஸ்பெகிஸ்தான், தென்கொரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் பெனால்டி கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தினர்.

### காலிறுதியோடு நடையைக் கட்டிய முன்னால் சம்பியன்கள்

விறுவிறுப்பாக இடம்பெற்றுவந்த 18 ஆவது ஆசியக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் தீர்மாணமிக்க சுற்றான காலிறுதிக்கு சுப்பர் 16 சுற்றிலிருந்து 8 அணிகள் களம் கண்டன. இதில் முதல் போட்டியில் தஜிகிஸ்தான் அணி ஜோர்தான் அணியை எதிர்த்தாடியது. இப் போட்டியில் கனோனொவ் 66ஆவது நிமிடத்தில் அடித்த ஓன் கோலினால் ஜோர்தான் அணி 1:0 என வெற்றி பெற்று முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

அடுத்த காலிறுதி ஆட்டத்தில் 3 முறை சம்பியன் மகுடம் வென்ற தென் கொரிய அணி ஒரு முறை சம்பியனான அவுஸ்திரேலிய அணியை எதிர்த்தாடியது. இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் பாதியில் பதிவு செய்த கோலுக்கு இரண்டாம் பாதியின் மேலதீக நிமிடங்களில் இரு கோல்களை தொடராக உட்செலுத்திய தென்கொரிய அணி 2:1 என வெற்றி கொண்டு அசத்தியது. முற்றுமொரு காலிறுதியில் 4 முறை சம்பியனான ஜப்பான் அணியை 3 முறை சம்பியன் பட்டம் வெற்றிருக்கும் ஈரான் அணி 2:1 என போராடி வீழ்த்தி அரையிறுதிக்குள் கால்பதித்தது.

மேலும் இறுதிக் காலிறுதிப் போட்டியில் போட்டிகளை நடாத்தும் நடப்புச் சம்பியனான கத்தார் அணி உஸ்பெகிஸ்தான் அணியை எதிர்த்தாடி போட்டி முடிவு நேரத்தில் 1:1 என சமநிலை பெற்றிருந்ததுடன் பெனால்டி உதையில் 3:2 என வெற்றி கொண்டு தன் அரையிறுதி வரவை உறுதி செய்தது.

### அரையிறுதிப் போட்டியிலும் ஆதிக்கம் செலுத்திய கத்தார், ஜோர்தான்.

24 அணிகள் பங்கேற்ற இத் தொடரில் விலகல் சுற்றுக்கல் முடிவில் மிகு 4 அணிகள் தீர்க்கமான அரையிறுதிக்குத் தெரிவாகியது. இதில் கடந்த 6ஆம் திகதி அஹமட் பின் அலி விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் ஜோர்தான் அணி தென்கொரிய அணியை எதிர்த்தாடியது. இப் போட்டியின் முதல் பாதி ஆட்டம் இரு அணிகளின் தடுப்பு ஆட்டத்தினால் கோலின்றி நிறைவு பெற்றது. பின்னர் தொடர்ந்த 2ஆம் பாதியில் வேகம் காட்டிய ஜோர்தான் வீரர்களில் 53 ஆவது நிமிடத்தில் அல் நைமட் முதல் கோலை போட்டு அசத்த, 66 ஆவது நிமிடத்தில் அல் தாமரி அணிக்கான 2ஆவது கோலையும் செலுத்தி ஜோர்தான் அணியின் வெற்றியை உறுதிப் படுத்தினர். இதனால் 2:0 என வெற்றி கொண்ட ஜோர்தான் அணி முதல் முறை சம்பியன் மகுடம் வெல்லும் கனவுடன் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

அடுத்த அரையிறுதி ஆட்டம் 7ஆம் திகதி அல் துமாமா உதைப்பந்தாட்ட அரங்கில் ரசிகர்கள் புடைசூழ 3 முறை சம்பியன் பட்டம் வெற்ற ஈரான் அணிக்கும் நடப்புச் சம்பியனான கத்தார் அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இப் போட்டியின் முதல் பாதியின் ஆரம்ப நிமிடமான 4ஆவது நிமிடத்திலே அஸ்மவுன் கோலைப் புகுத்த ஈரான் முன்னிலை பெற்றது. பீன்னர் 17ஆவது நிமிடத்தல் ஹெபர் கத்தார் அணிக்கான கோலை போட்டு ஆட்டத்தை சமன் செய்தார். பின்னர் முதல் பாதியின் இறுதியில் அக்ரம் ஆபிப் கோலை உள்நுழைக்க முதல் பாதி 2:1 என கத்தார் வசமானது.

கத்தாரின் முன்னிலையுடன் தொடர்ந்த 2ஆம் பாதி ஆட்டத்தின் 51 ஆவது நிமிடத்தில் ஈரான் அணிக்கு கிடைத்த பெணால்டி வாய்ப்பை ஜகன்பக்ஸ் கோலாக மாற்ற போட்டி 2:2 என மீண்டும் சமனானது. இருப்பினும் வெற்றி கோலுக்காக இரு அணி வீரர்களும் முந்தியடிக்க ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில் அலி கத்தார் அணிக்காக வெற்றி கோலை அடிக்க மைதானம் சத்தத்தில் மிரண்டு போனது. இறுதியில் 3:2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நடப்புச் சம்பியன் கத்தார் அணி தொடரான 2ஆவது முறையாகவும் இறுதிப் போட்டிக்குள் கால் பதித்து அசத்தியது.




### பெனால்டியால் ஆளப்பட்ட இறுதிப் போட்டி

18ஆவது ஆசியக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் தீர்மாணமிக்க இறுதிப் போட்டி நேற்று (10) இலங்கை நேரப்படி 8.30 மணிக்கு நடப்புச் சம்பியனும் போட்டிகளை நடாத்தும் கத்தார் மற்றும் ஜோர்தான் அணிகளுக்கிடையில் லுசாலி உதைப்பந்தாட்ட அரங்கில் ஆரம்பித்தது. ஆரம்பிக்க முன்னரே மைதானம் ரசகர்களால் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இதனால் ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் பந்துடன் ஜோர்தான் கோல் கம்பம் நுழைந்த கத்தார் முன்கள வீரரை ஜோர்தான் வீரரான ஒல்வன் தள்ளிவிட பெனால்டி உதைக்கான வாய்ப்பு கத்தாருக்கு கிடைத்தது. அதனை கம்பத்தின் வலப்புறம் உள்ளனுப்பிய அக்ரம் ஆபீப் 1:0 என முதல் பாதியில் கத்தாரை முன்னிலைப்படுத்தினார்

பின்னர் ஆரம்பித்த தீர்மாணமிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் ஜேர்தான் வீரர்கள் ஆக்ரோசம் காட்டினர். இதனால் ஆட்டத்தின் 67ஆவது நிமிடத்தில் ஹடாட் கொடுத்த நேர்த்தியான பந்துப் பரிமாற்றத்தை அல் நைமட் கம்பத்தினுள் செலுத்தி போட்டியை 1:1 என சமன் செய்தார். இருப்பினும் அடுத்த 4ஆவது நிமிடத்தில் கத்தார் அணிக்கு மீண்டும் ஒரு பெனால்டி உதை கிடைக்க அதனையும் அக்ரம் ஆபீப் வலப்புத்தின் ஊடாக கம்பத்தினுள் செலுத்த 2:1 என மீண்டும் முனனிலை பெற்றது நடப்புச் சம்பியன் கத்தார்.

மேலும் தொடர்ந்த ஆட்டத்தில் கத்தாரின் கோலுக்கு பதிலடி கொடுக்க பெரிதும் போராடியது ஜோர்தான் அணி. இருப்பினும் கத்தார் அணியின் பின்கள வீரர்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு மேலதீக கோல்கள் உள்நுழையாத வண்ணம் காத்துக் கொண்டனர். இருப்பினும் ஆட்டத்தின் மேலதீக நேரமான 95ஆவது நிமிடத்தில் பந்துடன் தனி ஆளாய் ஜோர்தான் பெனால்டி எல்லைக்குள் நுழைந்த அக்ரம் ஆபீபை ஜோர்தான் கோல்காப்பாளர் வேண்டுமென்று தள்ளி விட மீண்டும் ஒரு பெனால்டி வாய்ப்பு கத்தாருக்குக் கிடைத்தது. அதனை இடப்புறமாக கோல் கம்பத்தினுள் அக்ரம் ஆபீப் உள்ளனுப்ப கத்தாரினதும் அக்ரம் ஆபீபினதும் ஹெட்ரிக் கோலாக மாறியதுடன் போட்டி முடிவில் 3:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் ஜோர்தானை வீழ்த்திய நடப்புச் சம்பியனான கத்தார் மீண்டும் சம்பியன் மகுடத்தை கரம் ஏந்தி அசத்தியதுடன் ஆசியாவின் உதைப்பந்தாட்ட அரசர்களாகவும் தங்களை அடையாலப்படுத்தியுள்ளது.

### இறுதிப் போட்டியில் ஹெட்ரிக் அடித்த ஆபீபிற்கு சிறந்த வீரருக்கான விருது

இப் 18ஆவது ஆசியக் கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரில் அதிக கோல்களை உட்செலுத்திய வீரர்கள் வரிசையில் கத்தாரின் நட்சத்திர வீரரான அக்ரம் ஆபீப் முதலிடத்தில் உள்ளார். இத் தொடரின் இறுதிப் போட்டியில் ஹெட்ரிக் கோளினைப் பதிவு செய்ததன் மூலம் மொத்தமாக 9 கோல்களை உட்செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத் தொடரின் பெறுமதிமிக்க வீரருக்கான விருது அத்துடன் இத் தொடரின் சிறந்த வீரருக்கான விருது ஆகிய இரண்டையும் அக்ரம் ஆபீப் தன் வசப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மேலும் அடுத்த இடத்தில் ஈராக் அணியின் முன்கள வீரரான ஏமன் ஹுசைன் 6 கோல்களுடன் உள்ளார். மேலும் இவ் வரிசையில் ஜப்பானின் அயசே உட 4 கோல்களையும் பதிவு செய்து, 3ஆம் இடத்தில் உள்ளனர். மேலும் தலா 3 கோல்களைப் பதிவு செய்துள்ள பலஸ்தீன் அணியின் ஒடே டபாக், தென் கொரியாவின் சென் எயுன் மின் மற்றும் லீ காங் இன், ஈரானின் மேஹ்டி தரேமி, கத்தாரின் ஹசன் அல் ஹஸ்டோல் மற்றும் ஜோர்தானின் மூஸா அல் ஹ்டோஸ், யசான் அல் நய்மட் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

அத்தோடு 18ஆவது ஆசியக்கிண்ணத் தொடரின் சிறந்த கோல்காப்பாளருக்கான விருதினை கத்தார் அணியின் கோல்காப்பாளரான மிஸ்ஸல் பர்ஸ்லாம் பெற்றுக் கொண்டதுடன், இத் தொடரின் சிறந்த அணிக்கான விருதையும் கத்தார் அணிதனதாக்கியமை சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் இத் தொடரில் கோலுக்கு துணை நின்ற வீரர்கள் பட்டியலில் ஈராக்கின் அல் ஜாசிம், ஈரானின் சர்தார் அஸ்முன் மற்றும் கத்தாரின் அக்ரம் ஆபிப் ஆகியோர் தலா 3 கோலுக்கான பந்துப் பரிமாற்றத்தைச் செய்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.




### மஞ்சல் அட்டையிலும் கத்தார் வீரர்கள் முன்னிலை

இத் தொடர் விறுவிறுப்பிற்கு பஞ்சமின்றி இடம்பெற்றிருக்க வீரர்கள் விதிகளை மீறுவதும் அதிகமாகவே இடம்பெற்றிருந்தது. அதற்கமைய இத் தொடரில் மொத்தமாக 6 சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டுள்ளது. அதில் அவுஸ்திரேலிய வீரரான ஏடன் ஓணில், ஈரான் வீரரான ஏமன் ஹுசைன், கிரிகிஸ்தான் வீரரான கிமி மெர்க், வியட்நாம் வீரரான குவாட் சேன் காங் , மற்றும் ஈரானின் மேஹ்டி தரேமி ஆகியோருடன் அரையிறுதிப் போட்டியில் ஈரானின் கலிசடேஹும் சிவப்பு அட்டைகளைப் பெற்றிருந்தனர்.

மேலும் எச்சரிக்கைக்காக வழங்கப்படும் மஞ்சல் அட்டையினைப் பெற்றுக் கொண்ட வீரர்கள் வரிவையில் கத்தார் அணியின் பெட்ரோ மிகுஎல் 3 அட்டைகளுடன் முதலிடத்தில் உள்ளார். அடுத்த இடமங்களில் தலா இரு அட்டைகளுடன் உஸ்பெகிஸ்தானின் ஒடாபெக், தென்கொரியாவின் கிம் மின்ஜோ, யு.ஏ.இ இன் தானூஸ் அல்ஸாபி மற்றும் சிரியாவின் மஹ்மௌட் அல் அஸ்வாட் ஆகியோர் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.